www.padippakam.com

# நாளைவிடியும்

இரு திங்களிதழ்



ஓவியர்: திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்


| | | |
|---|---|---|
| ஒளி 10<br>கதிர் 3<br>இதழ் 57 | திருவள்ளுவர் ஆண்டு 2038<br>கும்பம்-மீனம்-மேழம்<br>மார்ச் - ஏப்ரல் 2007 | மொழிப்பற்றெங்கே<br>விழிப்புற்றெழுக |


படிப்பகம்

www.padippakam.com

## ...உள்ளே...


- பூப்பு நீராட்டு குமுகத் தேவையா?
- நூல் அறிமுகம்
- உங்களிடமிருந்து....
- கவிதை & கட்டுரைப் போட்டி
- பெண்ணின் கலாச்சாரம்



ஆண்டு நன்கொடை : உருவா 40/-
மூன்றாண்டு நன்கொடை : உருவா 100/-
வாழ்நாள் நன்கொடை (ஆயுள் சந்தா) உருவா.400/- (12 ஆண்டுகள்)
நன்கொடைகள் அனுப்பி இதழ் தொய்வின்றித் தொடர உதவுங்கள்

**விளம்பரக்கட்டணம்**
முழுப்பக்கம் : உருவா. 500/-
அரைப்பக்கம் : உருவா. 300/-

காசோலை, வரைவோலை
**பி.இரெ.இராசாராம், (P.R.Rajaram)**
என்ற பெயரில் எடுக்கவும்.

*ஆசிரியர்*
**பி.இரெ. அரசெழிலன்**
ஆசிரியர் குழு
**இரா.பே. இராசப்பா**
**ம.பி. அனுராதா**
**ந. கருணாகரன்**



*மின்னஞ்சல்* : arasezhilan-1964@yahoo.co.in



*இதழ் வடிவமைப்பு:*
சென்னை மாணவர் நகலகம், திருவெறும்பூர்.
பேச :2512798


# நாளை விடியும்

தோழமை வணக்கம்.

மார்ச் 8 உலகப் பெண்கள் நாள். வலிகளைச் சுமந்து, உயிர்களை இழந்து போராடிய பெண்ணினப் போராளிகளின் நினைவைப் போற்றுகின்ற உயர்ந்த நாள். அது இன்று காட்சி ஊடகங்களாலும் அச்சு ஊடகங்களாலும் மிகக் கேவலமாக மலினப்படுத்தப்பட்டுவிட்டது. என்கிற வேதனையும் கோபமும்தான் நமக்கு எழுகிறது. ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் என்கிற பெயரில் நாடெங்கும் ஆரவாரக் கூத்துகள் அரங்கேறி, பெண் தன் சுயத்தை இழக்கிற நிலைதான் ஏற்படுகிறது.

திருச்சியில் 35 மகளிர் அமைப்புகள் இணைந்து நடத்திய உலக மகளிர் நாள் விழா போட்டிகளில்



*படம் : தினமலர் 18.02.2007*

ஒன்றான மெகந்தி போட்டியின் படம் இது. வேறொன்றும் சொல்வதற்கில்லை.

தோழமையுடன்,
**பி.இரெ.அரசெழிலன்.**

**நாளை விடியும் - முகவரி மாற்றம்**


*இனி தொடர்புக்கு....*
நாளை விடியும் தமிழ்ச்சுடர் இல்லம்
7ஆ, எறும்பீசுவரர் நகர்
(காவேரி சிற்றங்காடி எதிரில்)
மலைக்கோயில் தெற்கு திருவெறும்பூர்.
திருச்சிராப்பள்ளி-620 013.




படிப்பகம்

www.padippakam.com

# பூப்பு நீராட்டு குமுகத் தேவையா?

தா.பெ.அ.தேன்மொழி

ஒவ்வோர் ஆணும் பெண்ணும் எவ்வகை வேறுபாடுமின்றிக் கருவுற்று உருவடைந்து பிறக்கின்றனர்!

உருவாக்க நிலைக்கும் பிறப்பு நிலைக்கும் ஒரே சமநிலையைப்பெற்ற ஆணினமும் பெண்ணினமும் உடலியலில் சில மாற்றங்களைப் பெற்றுள்ளன. அவ்வாறான மாற்றங்கள் ஆண் பெண் வாழ்வியல் நிலையில் இன உருவாக்கம் செய்யும் வகையில் வேறுப்பட்டு அமைந் துள்ளது. அவை தேவையான பருவங்களில் வளர்ச்சியும் மாற்றமும் பெண்களுக்கு மட்டுமே நிகழ்வதாக எண்ணி, அதை வெளிப்படுத்தும் நோக்குடன் கட்டாயத்துடன் பல சடங்கு நிகழ்வுகளை அறிவுத் தெளிவின்றி நடத்துகின்ற ஒன்று தான் பூப்பு நீராட்டு விழா என்பதுவாகும்.

ஆண்பிள்ளை பெண்பிள்ளை என்ற வேறுபாடின்றி விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள், ஒரு பருவத்தில் தன் மகிழ்வுத்துள்ளலை நிறுத்திக்கொள்கின்றனர். தம் உள்ளம் குழந்தைமயமான நிலையிலும், ஆனால் சிறிதே அறிய முற்படுகின்ற ஆர்வ நிலையில் ஏன் எப்படி எதற்கு என்ற வினா துளிர்க்கும் நிலையில் உள்ளபோது, தம் உடலில் ஏற்படும் இயற்கையான பருவ மாற்றங்கள் சிலவற்றைக் கண்டு அதிர்ச்சியும் வியப்பும் அடைகின்றனர்.

ஆனால், எவரிடமும் வினவமுடி யாத முதல் மனஅதிர்வைப் பெற்றதன் விளைவாகக் குழப்பத்துடன் உலவு கின்றனர்! அவ்வாறான மனநிலையை இருபாலினமும் அடைந்தாலும் "பூப்படைதல்" என்னும் உடலியல் பருவமாற்றம் பெண்களை அச்சமுறச் செய்து தன் பெற்றோரிடமோ உறவினரிடமோ கூறுகின்ற நிலையை உருவாக்குகிறது.

இந்தப்பருவநிகழ்வை அறிந்தவர்கள் உடனே அந்தப் பெண்ணைத் தனிமைப்படுத்தி அமரவைத்து அந்நேரத் திற்கு உடலுக்குத் தேவையான சிறப்பு உணவை அளித்து மகிழ்வடைகின்ற னர். ஆனால், அவள் மனத்துக்குள் உருவாகும் வெளிவரவியலா மெலிவான ஒரு வினாவிற்கு உறுதிதரும் விடையளிக்க எவருக்கும் அறிவிருப்பதாகத் தெரியவில்லை!

அப்பெண்ணின் இயல்பை மாற்றி இயற்கையான மனப்போக்குகளையும் துள்ளுகின்ற ஓட்ட நடைகளையும் கட்டாயப்படுத்தித் தடைப்படுத்துகின்றனர். அவ்வாறான காலங்களில் உறவினர்களுள் உள்ள ஆண்கள் முகத்தையும் பார்க்கக்கூடா தென்றும் அதற்கு பல மூடத்தனமான காரணங்களையும் சொல்லி அவளை ஊமையாக்கி வைத்திருப்பதும் நம்மைப் பேச வைக்கின்றது! இந்தக்குமுகாயம் (சமுதாயம்) கல்வியறிவற்ற பெண்களை உருவாக்கியுள்ளமையும் இந்நிலைக்கான பல காரணங்களுள் ஒன்றெனக் கருதலாம்.

ஆனால், கல்வியறிவுள்ள பெண்கள், பலரும் பகுத்தறிவற்ற மூடர்களாய் வழி வழி வரும் பழக்கவழக்கங்களுக்கு அடிமைகளாகி ஏன் எப்படி எதற்கு என்ற வினாவெழுப்பும் திறனறிவற்ற சோற்றுப்பிண்டங்களாய் வளர்ந்துவரும் நிலைதான் இம்மூடப் பழக்கங்கள் வளர மேலும் ஏதுவா கின்றது.

பெண்கள், ஒவ்வொன்றையும் அறிகின்ற ஆர்வம் செலுத்தினால்தான் அவர்கள் அறிந்தவற்றுள் சரியானது எது? சரியற்றது எது? என்று



படிப்பகம்

www.padippakam.com

பகுத்தறியக்கூடிய வாய்ப்பு உருவாகும்! அப்போதுதான் எதை ஏற்பது? எதை ஏற்காமல் ஒதுக்குவது என்ற அழுத்தமான முன்னறிவும் ஏற்படும்! அவ்வாறான தெளிவும், பகுத்தறிவும் அறிவுநிலையும் தான் சரியற்றதை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று போராடக்கூடிய மனத்திண்மையை அளிப்பனவாகும்!

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்பதைக் காரணங்காட்டி நாம் வாயை மூடிக்கொண்டு, எதற்கும் மூடத் தனமான நிகழ்வுகளைத் தொடர்ந்து செய்து வருவது பல வாழ்வியல் சிதைவுகளையும் மனச்சிதைவுகளையும் அளிக்கும் என்பதை இன்னும் அறியாத பெண்கள் பலர் இருப்பதால்தான் பூப்பு நீராட்டு விழாவை இந்த அறிவியல் காலத்திலும் நாம் ஏற்று நடத்தி இழிவுபட்டுக் கொண்டுள்ளோம்!

ஒரு பெண் பூப்பு அடைகிறாள் என்றால் என்ன? அந்தப் பருவம் அடையும் நிகழ்வை உலகிற்கு அறிவிப்பதற்கான காரணம் என்ன? ஆணும் அவ்வாறான பருவநிலையை எய்துவதை இந்தக் குமுகாயம் ஏன் வெளிப்படுத்துவதில்லை? ஆண்-பெண் இருவருமே, உடலியல் வளர்சிதை மாற்ற இயக்கம் என்ற அறிவியல் நோக்கில் பார்க்கும்போது பருவமெய்து கின்றனர். ஆனால் பெண்களின் பருவமெய்துகை மட்டிலும் அனைவராலும் கருதப்படும் போது, இவ்விடத்திலிருந்து பெண்ணை அடிமைப்படுத்தும் நிலை தொடங்கப் படுகிறது. மேலும், பெண்ணுக்குத் திருமணம் செய்ய எண்ணும் போது கூட-வானின் கோளியக்கம், அவளின் பருவமடைந்த நேரம், காலம் இவற்றை முடிவு செய்யப்படுவதாகிய நெடுநாளைய மூடவழக்கத்தைப் பெரும்பாலான கல்வியாளர்களும் தவிர்ப்பதில்லை!

கல்வியறிவும் பட்டறிவும் ஏன் பகுத்தறிவும் கூட, பிறப்பியத்தின் (சாதகத்தின்)காலில் விழுவதைப் பார்த்து அதிர்வடைகின்றோம்! எந்தப் பிறப்பியமும் ஆணின் பருவமடையும் நேரத்தைப்பற்றிக் கேட்பதுமில்லை! கணக்கில் எடுத்துக்கொள்வது மில்லை!

பருவமடையாத பெண் என்ற வாறு வேறுபடுத்தி இழிவுபடுத்தப் படுவதும் துயருறுத்தப்படுவதும் எந்த ஆணாலும் எந்த ஆணுக்கும் நேர்வதில்லை . எல்லா இழிவுகளையும் வாழ்வில் ஏற்படும் அனைத்துக் குறைபாடுகளையும் பெண்களின் மீதே சுமத்திவிட்டு ஆண்களிற் பெரும்பான்மையானவர்கள் பொறுப்பின்றி பெருமிதமாகத் தள்ளி நிற்கின்றனர்! ஆனால் ஆணும் பெண்ணும் சமம் என்று குமுகாயம் நயன்மையிழந்து உரக்கக் கூவி அங்கலாய்க்கிறது!

பருவமடைந்தபெண் தனக்கேற்பட் டுள்ள நிலைபற்றி அறியாத குழப்பநிலையில் உள்ளபோது ஒவ்வொரு தாயும் அவளுக்கேற் பட்டுள்ள உடலியல் மாற்றநிலை பற்றி விளக்கி அவளை இயல்பான நிலையில் இருப்பதற்கு அறிவான முறையில் மிகப் பதனாகக் (பக்குவமாக) கூற வேண்டியது இன்றியமையாக் கடமை! உலகியல் சடங்கிற்காக அல்லது நம் மரபுவழக்கம் மாறாமல் இருப்பதற்காக, நாம் நடத்தும் பூப்பு நீராட்டு விழா வழியாகப் பெண் பருவமடைந்த செய்தியை விளம்பரப்படுத்திப் பெண்ணைப் பொருளாக்குகிறோமே தவிர, அவளின் பொருள் பொதிந்த உள்ளுணர்வுகள் ஊமையாயிருந்து மடிகின்றனவே என்று எவரும் எண்ணுவதே இல்லை!

பெண் திருமணம் செய்யும் தகுதி



படிப்பகம்

www.padippakam.com

நிலைக்கு வந்துவிட்டதாகக் கூறும் இந்தக் குமுகாயம் அவளின் மற்ற தகுதிகளை அவளின் அறிவு நிலைக்கோ ஆக்க சிந்தனைகளுக்கோ உரிய தகுதிகளை மறந்து, வெறும் வாழ்வியல்துணையாகவும் பிள்ளை பெறும் பொறியாகவும் (இயந்திரம்) மட்டுமே கருதி அவளை இழிநிலைக் குட்படுத்துவதைத் தந்தை பெரியார் போல் இப்போதிருக்கும் ஆண்கள், தடுத்தெதிர்த்து ஒரு பெண்ணிய விடிவிற்கு அடிகோல வேண்டும்!

அறிவார்ந்த நிலையையும், கல்வியின் மேம்பாட்டையும், அதற்கும் மேலாக இக்குமுக இழிவுகளை அடியோடுஅழிக்கப் பெண்களுக்கேயுரிய கடமைகளையும், பெண்கள் ஒவ்வொரு வரும் உணர்ந்து, உணர்ந்தவர்கள் பிற பெண்களுக்கு உணர்த்தி, மற்ற சடங்குகள், மூடத்தனங்களைத் திணிக்கும் இழிவான பழக்கவழக்கங் களின் வழி, பெண்களின் உயர்ந்த நோக்கைத் திசை திருப்பாமலிருக்கப் பூப்பு நீராட்டு விழா என்னும் பண்பாடற்ற மூடவிழாவை நடத் தாமல்- பெண்களின் அறிவு, பண் பாடு, கல்வி உயர்வுக்கான விழாக்களை பேரளவில் நடத்தினால் இக்குமுகாயம் (சமுதாயம்) மேம்படும்! பெண்கள் உள்ள ஒளியும்,கல்வி அறிவும் பெறுவர்! அத்தகைய பெண்களால், ஒவ்வோர் இல்லமும் அறிவு ஒளிபெறும்! அவ்வாறான தெளிந்த அறிவுஒளி மட்டுமே இக்குமுகச் சீரழிவுகளையும், மூடத்தனங்களையும் தீய்த்துப் பெண்ணியத்திற்கான விடிவையும் நிலைநிறுத்தும்! பெண்களின் அறிவார்வச் செயற்பாடு ஒன்றே, அனைத்துக் குமுக விடிவிற்கும் மூலமான கதிரொளி என்பதைப் பெண்களுடன் ஆண்களும் உணரும் நாளே, பெண்ணிய விடுதலை நாள் ஆகும்!.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒன்றை இக்குமுகம் உணரவேண்டும்! இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் பேரளவு அரசியல் பித்தலாட்டங்களும் சாதியிழிவுக் கொடுமைகளும், இந்து- கிறித்துவ - முகமதிய மதப்பூசல்களும், தலைவிரித்தாடும் உணவுப்பற்றாக்குறைகளும் நீர்ச் சிக்கல்களும், பண்பாட்டுச்சீரழிவுகளும், மாந்தத் தன்மையிழந்த விலங்குகளாய் மாந்தர்கள் உலவிக்கொண்டுள்ள இச்சூழலில் நாம் அனைத்து இக்கட்டுகளையும் மறந்து பூப்பு நீராட்டு விழா என்று வெட்கமின்றி நடத்திக்கொண்டுள்ள நிலை, எவ்வளவு வருத்தத்திற்குரியது? ஒரு பெண் பருவமெய்துதல் என்பது, ஓர் இயல்பான நிகழ்வு! அதை ஓர் அறிவான கண்ணோட்டத்தில் மட்டுமே நாம் நோக்குதல் வேண்டும்!

நாம் பகுத்தறிவு பெற்றுவிட்டதாய் அலம்பல்காட்டிக்கொண்டு, நம் இனப் பகையின் மூடத்தனச் செய்கைகளை முனைந்து திருத்த எண்ணம் கொள் வதில்-எவ்வளவுக்கு உண்மையாழம் உள்ளது? மூடச் சேற்றில் அழுந்தியுள்ள நாம், இக்குமுகத்திற்கே தேவையற்ற இழிசெயல்களை எவ்வாறு அறவே நீக்க இயலும்?

பெண்ணியவிடுதலை- என்று மேடைப் பேச்சு பேசும் பெண்கள் ஆண்கள் அனைவரும், முதலில் பெண்களுக்கென்று இக்குமுகம் உருவாக்கியுள்ள வீணான மூடச்சடங்கு களையும், முட்டாள்தனச் செய்கை களையும் அறவே நீக்குவதற்கு முத லில் போராட வேண்டும்! அதற்காகச் செலவு செய்யும் பெருந் தொகையைப் பெண்களின் கல்விமேம்பாட்டிற்கும், அறிவியல்வளர்ச்சிக்கும் பயன்படுத்தி மகிழ்வடைய வேண்டும்!


படிப்பகம்

www.padippakam.com

அறிவியல் வளர்ச்சியை விழா வாகக் கொண்டாடும் உயர்ந்த எண்ணத்தை நாம் இயல்பாகப் பெறவேண்டுமானால், வாழ்வியலில் நாம் கடைப்பிடித்துவருகின்ற அனைத்து மூடத்தனங்களும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டாக வேண்டும்! மேலைநாடுகளில் அறிவியல் ஆக்கங்களை மேலும் மேலும் பெருக்கத்திட்டமிட்டுக் கல்வியைக்குழந்தைகளுக்குக் கற்றுத்தருகின்ற உயர்ந்த சூழலை நாம் எண்ணிப்பார்த்து, நம் நாட்டில் நாமே - உருவாக்கிக் கொண்டுள்ள இவ்வகை இழிந்த அடிமைச்சடங்குகளைத் தூர்த்தெறிந்தாலொழிய நம் உள்ளத்தில் அறிவு வேட்கையுங்கூடத் துளிர்க்காது!

ஓர் அறிவுக் குமுகாயத்தை-பகுத்தறிவு மூளைகளை உருவாக்கத் தானே தந்தை பெரியார் அவர்கள் தன்வாழ்வின் முழுப்பகுதியையும் பயன்படுத்திப் போராடினார்! அவருடைய கருத்துக்களை மேடையேறிப்பேசி, அவரவரும் புகழேணியில் ஏறிக்கொள்வதும் அந்நிலையால் தங்களையே வளமாக் கிக்கொண்டு வாழ்வதும் தவிர, எந்தக் கருத்துச் செயற்பாடுகளையும் நாம் எண்ணுவதுமில்லை; திட்டமிடு வதுமில்லை!

ஒரு பெண் பிறப்பதற்கும் - பருவமடைவதற்கும் - திருமணம் ஏற்பதற்கும் - அவளின் இல்வாழ்வு தொடங்குவதற்கும் - அவள் முதல் குழந்தையைச் சுமக்கும்காலத்தில் வளைகாப்பு என்ற மூடச்சடங்கு செய்வதற்கும் கூட, கணியம் (சோதிடம்) பார்க்கிறோம்! அடுத்து அவள் குழந்தையைப் பெற்ற நொடியிலிருந்து குழந்தைக்கும் கணியம் பார்க்கும் வீண்செயலைத் தொடங்கிவைக் கின்றோம்! பெண்ணின் வாழ்வும், அவள் சேர்ந்த குடும்பத்தின் வாழ்வும் கணியத்தாலேயே கணிக்கப்படுகிறது! ஆனால், அவளுக்கு இயற்கையில் வாய்த்த அறிவுப்புலன்களாகிய ஐம்புலன்களும் தூர்க்கப்படும் நிலை தொடங்கப்பெறுகிறது! அவை ஒவ்வொன்றன் உணர்வு வெளிப்பாடு களும் அறிவோடு இணைந்து செயற்பட்டால் எத்தகைய அரிய விளைவுகள் நிகழும் என்பதை அறியாமலேயே, அவள் வாழ்வி யலுக்கான ஒரு வெறுங்கருவியாக மட்டுமே ஆண்களால் இயக்கப்படு கின்றனர்!

வாய்ச்சுவைக்கான உணவு சமைக்கும் பொறியாக ஊக்கப் பெறுகின்றாள்! பிள்ளைகளைப் பெற்றுத்தரக் கூடிய ஓர் இயற்கைப் பொறியாக ஏற்கப்பெறுகின்றாள்! மேலும், இன்பம் துய்க்க ஏற்ற ஓர் அசையும் பொருளாகவும், விலைபேசித் தன் குடும்பத்திற்கு அழைத்துச் செல்லப் பெறும் நிலையான பணியாளியாகவும் இன்றும் எண்ணப்பெறுகின்றாள்! அவளின் அறிவும் - அரிய நுண்ணுணர்வும் அவ்வாறான ஆண்களால் எண்ணவோ ஏற்கவோ பெறுவதில்லை! அவர்களுக்கு அந்த அறிவேற்கும் தகுதியும் அமைந்துள்ளதாகக் கூற இயலாது!

அருமைப் பெண்களே! எண்ணிப் பாருங்கள்! நாம் யார்?—

பகுத்தறிவற்ற சடப்பொருளா? நம் அறிவும் பகுத்தாயும் திறனறிவும் ஆணாளுமைக் குமுகத்தின் காலடியில் முடங்கிக்கிடக்க வேண்டுமா? ஒரே வழியில் பிறக்கும் நாம் எவ்வாறு அந்நொடியினின்று வேறுபடுத்தப் படுகின்றோம்!ஒரே தாய் வயிற்றில் பிறக்கும் நாம், நம் அண்ணன் தம்பியி மிருந்து எவ்வகையில் மாறுபடுகின் றோம்? பிறப்பது பெண்ணென்றால்



படிப்பகம்

www.padippakam.com

அவளுக்கு மூளை இருக்காது அறிவுணர்வு இருக்காது, மற்ற நுண்ணுணர்வுகள் இருக்காது என்று எந்த அறிவியல் ஆய்வினால் மெய்ப்பிக்க முடியும்? ஏன், நாம் இதற்கெல்லாம் ஊமையாக நின்று நம்மீது சுமத்தப்படும் மூடச்சடங்கு களுக்கு இசைவளிக்கும் சடங்களாக வெற்றுப்பதுமைகளாக அமைந்திருக்க வேண்டும் ? நாம் என்ன உணர்ச்சியற்ற பிண்டங்களா? அவ்வாறுதான் வாழ்வு முழுக்கவும் நாம் அசைந்து தொலைக்க வேண்டுமா? நாம் எல்லா அறிவிலும் மேம்பட்டவர்கள்! நமக்காக இக்குமுகாயம் நம்மீது திணிக்கும் சடங்குகளையும் விழாக்களையும் பகுத்தறிவு விழிப்போடு அறவே அழிப்பதற்கு நாம் போராடுதல் வேண்டும்.

பூப்பு நீராட்டு என்றால் என்ன? அவ்விழாவை எடுக்க என்ன காரணம் என்று - எந்தப் பெண்ணோ, ஆணோ வெளிப்படையாக விளக்கவியலுமா? அப்படித்தானே நாம் அறிவு விளக்க மற்றவர்களாய், இக்குமுகம் நம்மீது போர்த்திய நாணம் என்ற தோலுக் குரியவர்களாய்ப் பெருமைப்பட்டுக்கொண்டுள்ளோம்! அவ்வாறானவர் களைத்தாமே இக்குமுகம் பெண்மைக் குரியவர்களாய் மதிக்கின்றது?

பெண்களுக்கான அடிமைக் கூறுகளில் ஒன்றாகவே பருவமெய்து தலுக்கான விழா தொடங்கப்பெறு கின்றது. பெண்மையும் இழிவுப் படுத்தப்பெறுகின்றது. பருவமெய்துதல் என்னும் இயற்கைநிகழ்வை எய்தும் பெண்களைப் போலவே, ஆண்களும் பருவமெய்துகின்றனரே! ஆனால், அதற்கென விழா ஒன்றும் நிகழ்த்தப்படுவதில்லையே!?

உடலியல் கூறுகளில் ஏற்படும் மாற்றங்களை அறிவதும், அதுபற்றி மற்றபெண்களுக்கும் ஆண்களுக்கும் அறிவுப்பார்வையில் விளக்குவதும் கற்றறிந்த பெண்களின் ஆண்களின் கடமைகளாகும்! இல்வாழ்விற்கு ஏற்ற உடல் நிலையைப் பெண் அடைகிறாள் என்பதை நாணமின்றி விழா எடுத்துக் கூறத்துணியும் இக்குமுகம், ஆணும் அடையும் அவ்வாறான நிலையையும் விழா எடுத்துக் கூறத்துணியாதது மட்டும் ஏன்? அதுபோன்றே பெண்களின் இப் பருவமெய்துதல் நிலையும் இயல்புக் குரியதாகவும் தேவையற்றதாகவும் கருதப்பெற வேண்டும்!

பெண்களுக்கான விழா எடுப்ப தானால், பெண்களாகிய நாம் ஏற்கும் குமுக மேம்பாட்டுப் பணிகளுக் காகவும், குமுகத்தில் மண்டிக்கிடக்கும் சாதிமதச் சகதிகளைத் தூர்க்கும் நிலைக்காகவும், மூடத்தனங்கள் ஒழிந்த அறிவு விளக்கம் பெறும் ஆண்-பெண் குமுக விழிப்பிற்காகவும் இருக்க வேண்டுமே தவிர, அறியாமையால் தொடர்ந்து நமக்காக நடைபெறும் பூப்புச்சடங்குகள், வளைகாப்பு விழாக்கள் என்பனவாக இருத்தல் வேண்டா!

அன்பும் பகுத்தறிவும் உள்ள தாயுள்ளங்களே! நம் வயிற்றில் உருவாகும் பெண்-ஆண் பிள்ளைகள் இருவரும் சமமானவர்கள் என்பதை நாம் முதலில் உணரவேண்டும்! உடற்கூறுகள் சிலவற்றில் ஆண் பிள்ளைகள் வேறுபட்டிருக்கலாம்! அவை பற்றியான விளக்கத்தை நாம் அறிவு நோக்கில் எடுத்துக் கூறலாம்! இருவருக்கும் வழங்கும் மற்றைய அனைத்து உரிமைகளும் சமநிலையில் இருக்க வேண்டும் என்று போராடுவதில் பெண்களாகிய நமக்குத்தான் முதல் உரிமையுள்ளது!


படிப்பகம்

www.padippakam.com

கல்விநிலையில், அறிவுநிலையில், நுண்ணோக்குநிலையில், ஆக்கநிலையில், கணக்கியல்நிலையில், குமுக அறிவுநிலையில், அதற்கும் மேலாகச் சிறந்த வாழ்வியல்நிலையில்- அரசியல் நிலையில் ஆக அனைத்து நிலைகளிலுமே ஆண்களையும் மிஞ்சிய அறிவு பெற்றுள்ள பெண்களை நாம் அறிவால் ஏந்திப் பெருமையும் ஊக்கமும் அடையச்செய்ய வேண்டும்!

அவர்களை ஏந்திழைகளாக்கிக் காட்சிப் பொருளாகவும் நுகர் பொருளாகவும் எண்ணும் ஆண்களைப் புறக்கணித்து, பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்பதை மெய்ப்பித்துக் காட்டுவதில் சளைக்காது நாம் போராடினால் மட்டுமே, பெண்ணியம் வெற்றிபெறும்! பெண்களின் மேல் திணிக்கப்பெறும் இழிநிகழ்வுகள் அனைத்தும் புதைக்கப்பெறும்! பெண்ணுரிமை மலர்ச்சிபெற்று காக்கப்பெறும் என்பதை உறுதியாக நம் உள்ளத்தில் செதுக்கிக்கொள்வோம்!

**பூப்பு நீராட்டு குமுகத்தேவையா?**

- என்ற நூலிலிருந்து...

**நூல் கிடைக்குமிடம்**

**நா.பெ. அ. தேன்மொழி**

மகளிர் பகுத்தறிவு தன்மானக் கழகம்
6- பாவலரேறு தெரு (காளிக்கோயில் தெரு) தமிழூர் (திலாசுப் பேட்டை)
புதுச்சேரி-605009 விலை : உருவா 5/-

## 'கற்பழிப்பு' வார்த்தையை சட்டத்தில் நீக்க பரிந்துரை

புதுடெல்லி, மார்ச் 7 : இந்திய தண்டனைச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள "ரேப்" (கற்பழிப்பு) என்ற வார்த்தையை நீக்கிவிட்டு "செக்சுவல் அசால்ட்" (பாலியல் தாக்குதல்) என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்று சட்டக் கமிசன் பரிந்துரை செய்துள்ளது. குற்றத்தை பாரபட்சமாகக் காட்டாமல் இரு பாலாருக்கும் நடுநிலையானதாகக் காட்ட வேண்டும். என்பதே சட்டக் கமிஷனின் நோக்கம்.

இந்தத் தகவலை மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில் உள்துறை இணையமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

**நன்றி : தினகரன் 07.03.2007**

## அரவாணியின் அழுகுரல்

எதை இழக்கிறோம்
என்ற மயக்கத்தில்
அனஸ்தீசியா இல்லாமலேயே
அறுத்துக் கதறும் நொடியிலும்....
செருப்புக்கு அடியில் தன்மானத்தை
மலமென்றே மிதித்த படி,
கை நீட்டி கேவலப்பட்டு
நிற்கும் நாட்களிலும்
வன்மத்துடன் நுழையும் குறியால்
முச்சுமுட்ட நுரையீரல் திணறி
நிற்கும் நாட்களிலும்
எதற்கென்றே புரியாமல்
எங்களை நோக்கி உமிழப்படும்,
வீச்சமடிக்கும் எச்சில்களைக்
கேட்கிறேன்
மரணம் மட்டுமா மரணம்....?"

—'லிவிங் ஸ்மைல்' வித்யா.
(www.livingsmile.blogspot.com)


படிப்பகம்

www.padippakam.com

# பெண்ணின் கலாச்சாரம்

தாமரைச்செல்வி

ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாழும் முறை , அரசியல், கலைகள், ஆடை ஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித்தன்மை, அந்த சமூகத்தின் கலாச்சாரமாகக் கொள்ளப்படுகிறது. வாழும் காலங்களில் ஒரு இனம் அடையாளம் காட்டப்படுகிறது. சமூகத்தில் உள்ள பெண்களின் நடைமுறை பாவனையே இதில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பெண்களது எண்ணங்கள், உணர்வுகள் செயற்பாடுகள் மனித வாழ்வை அவள் எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்ப வற்றை அவளால் முழுமையாக சரியான விதத்தில் வெளிப்படுத்த முடிகிறதா என்பது பெரிய கேள்விக் குறியாகவே எம் கண்முன் நிற்கிறது. எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது இங்கே முக்கியமாகிறது.

இன்றைக்கு சமயம், கலை, பொருளாதாரம், இலக்கியம், தொடர் பூடகம், எனப் பல்வேறுபட்ட சகல கலாச்சாரச் செயற்பாட்டுத் தளங்க ளிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக்கருதப் படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல் ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

எமது நாட்டில் நிலவிய போர்ச்சூழல் ஆண்களின் இயங்கு தளத்தில் ஓரளவு இடைவெளி ஏற்படுத்திய நிலையில் பெண்கள் வீட்டுக்குள் இருந்துவிட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளதை கண் முன்னாலேயே நாம் பார்க்கிறோம். இங்கே பெண் களின் பங்களிப்புக்கான தேவை ஏற்படுமிடத்து அவர்கள் வெளியே வந்து செயற்படுவதற்கான சாதகமான நிலை ஏற்படுகிறது. இவர்கள் தாம் சார்ந்த துறைகளின் செயற்பாடுகளில் இந்தக் கலாச்சாரத்தை எவ்வகையில் பிரதிபலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்தக் கலாச்சாரத்தின் பெறுமதி கவனத்தில் கொள்ளப் படுகிறது. பெண்களின் செயற்பாடு களினூடாகக் கணிக்கப்படுகின்ற இந்தக் கலாச்சாரத்தைத் தீர்மானிக்கின்ற பொறுப்பும் பெண்களிடமே உள்ளதை நாம் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். இந்தப் பொறுப்பை எத்தனைப் பெண்கள் சரியாகப் புரிந்துகொள் கிறார்கள்? ஏதோ ஒரு அதிகார வர்க்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்தக் கலாச்சாரத்தின் தன்மை சரியானதுதானா என்று எத்தனை பேர் சிந்திக்கிறார்கள்?. இந்த விதமாக அமைந்து விட்ட இந்தக் கலாச்சாரத்தின் ஆடம்பரங்கள் பெண்களுக்குத் தேவையா? என்ற கேள்வி இன்று பலராலும் முன் வைக்கப்படுகின்ற கருத்தாகிறது.

பட்டாடைகளும் நகைகளும் ஆடம்பரமான சடங்குகளும்தான் எமது கலாச்சாரம் என்பதை ஏற்றுக் கொள்ளும் அறியாமையிலிருந்து நமது பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும். நகையும் பட்டாடையும் ஆடம்பரமான வாழ்வும்தான் தனக்குப் பெருமைதரும் என்று பெண் நினைப்பாளேயானால் அதுபோன்ற முட்டாள்தனம் வேறு இல்லை. தன் கல்வியாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுமையாலும் மனிதப் பண்புக ளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பா ளேயானால், அதுதான் சமுகத்தில் அவளுக்குப் பெருமை தரும் விடயம். குறைந்த பட்சம் இந்த விதமாய் நிமிரும் பெண்கள் என்றாலும் தமது வாழ்வை எளிமையானதாகவும் ஆடம்பர மற்றதாகவும் ஆக்கிக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டால் சமூகத்தில் மற்றவர்கள் பின்பற்றக்கூடிய முன்னுதாரணமாகத் திகழ்பவர்களாக இருக்க முடியும்.

போரினால் நலிவுற்றிருக்கும் நமது தேசத்தின் இன்றைய தேவை ஆடம்பரங்களைத் துறத்தல், எளிமையான வாழ்வைத் தேர்ந்தெடுத்தல். இது சாத்தியமாவது பெண்களின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது. சமூகத்தில் எந்தப்பிரச்சனை என்றாலும் அதற்கு முகம் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெண்களுக்கே உள்ளது. அநேகமான பெண்களின் வாழ்நிலை சராசரிக்கும் கீழாகவே அமைந்துள்ளது. போரின் நடுவேயான பல இழப்புக்களைத் தாங்கியவர்களாகவே இவர்களில் பலர் இருக்கிறார்கள். இத்தகைய நிலைமையில் எமது கலாச்சாரங்களின் ஆடம்பரங்கள் சுமைகளாக அழுத்துவதைப் பெண்கள் அனுமதிக்கக் கூடாது. எமது இயற்கை வளங்களுக்குப் பொருந்தக்கூடிய விதத்தில் எமது கலாச்சாரத்தை அமைக்கத் தவறினால் எமது இனம் பாரிய அழிவை எதிர் நோக்குவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும். பொதுவாகவே பெண்கள் ஆடம்பரமோகம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதைப் பல பெண்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் பலவிடையங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகவும் தம்மை அடையாளம் காட்டுகிறார்கள். பெண்ணே பெண்ணிடமிருந்து விடுதலை பெறவேண்டும் பெண்ணே பெண்ணை சமமாய் நடத்த முன்வரவேண்டும்.

சகமனிதரை நேசிக்கும் மனிதப் பண்பையும் எளிமையான வாழ்வை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் எமது கலாச்சாரமாக பெண்கள் ஏற்றுக் கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகிறது ■

## ஆர்ப்பாட்டத்தில் பெயர் சூட்டும் நிகழ்ச்சி

05.02.07 அன்று சென்னை சென்ட்ரல் மெமோரியல் அரங்கம் அருகில் புரட்சிகர இளைஞர் முன்னணி, 'முல்லைப் பெரியாறு அணை தமிழ்நாட்டு உடைமை' என்ற முழக்கத்தை முன் வைத்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது. அவ்வார்ப்பாட்டத்தில் புஇமு, பு தொமு தோழர்களும், மாற்று அமைப்பைச் சேர்ந்த தோழர்களும், 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் பழ.நெடுமாறன் (மஉகூ), தியாகு(தநேவிஇ), தாமரை(புஇமு), இராபச்சைமலை(மா பெ பொ க), அ.பத்மநாபன்(தநே பொ க), பொன்.மாயவன்(கநேம.க) புலவர் கி.த.பச்சையப்பன்(தஉகூ), புலவர் இறைக்குருவனார்(தென்மொழி அவையம்), புலவர் தங்க.. சங்கரபாண்டியன், கவிஞர்.தணிகைச் செல்வன், ஓவியர்.வீரசந்தனம், வழக்கறிஞர் பொ.வே.பக்தவச்சலம் மற்றும் பல முன்னணித் தோழர்கள் கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினர். கண்டன முழக்கங்கள் முழங்கப்பட்டன. அந்நிகழ்விலே புஇமு தோழர்களாகிய இசைமொழி தென்கனல்- தென்கனல் இசைமொழி ஆகியோரின் மகனுக்கு போராளித் தலைவன் என்று பொருள்படும் 'சமரன் நம்பி' என்ற தமிழ்ப்பெயர் சூட்டப்பட்டது. தோழர் பழநெடுமாறன் முன்னிலையில் தலைமை வகித்த தோழர் அன்பு அவர்கள் பெயரைச் சொல்ல அனைத்துத் தோழர்களும் 'சமரன் நம்பி' என மும் முறை முழங்கி பெயரைச்சூட்டி உருவாகும் போராளியை வாழ்த்தினர்.

தகவல் : பா.கா.தென்கனல்
இசைமொழி 17/22 மணலிப்புது நகர்
சென்னை - 600 103 பேசி - 9840704658



படிப்பகம்

www.padippakam.com

# சர்வதேசப் பெண்கள் தினம்

—ஆல்பர்ட்

பெண்கள் தினம் என்றால்- தீபாவளி, பொங்கல் தெரியும். அது என்ன பெண்கள் தினம்? என்று உழைக்கும் கீழ்த்தட்டுப் பெண்கள் வர்க்கம் அறிந்து கொள்ளாத தினமாகத்தான் இந்தப் பெண்கள் தினம் இன்றும் இருக்கிறது என்றால் அது மிகையாகாது. சர்வதேசப் பெண்கள் தினம் முகிழ்க்கக் காரணமே இந்த உழைக்கும் பெண் வர்க்கம்தான் காரணம் என்பது தங்கமுலாம் பூசப்படாத உண்மை!

பெண்கள் தினம் அதுவும் சர்வதேசப் பெண்கள் தினம்! இப்படி எல்லாம் ஒரு நாளைச் சொல்லி நாம் பெண்கள் தினத்தைக் கொண்டாட வேண்டிய நிலையில் இருக்கிறோம். மார்ச் 8 என்றால் சர்வதேச மகளிர்தினம் என்று நாமனைவரும் அறிவோம். ஆனால் எதற்காக மார்ச் எட்டாம் தேதியைக் குறிப்பாகத் தேர்ந்தெடுத்தார்கள்? சற்று வரலாறுகளில் வழுக்கிப் பின்னோக்கி நழுவினால் வியப்பூட்டும் பலதகவல்கள் நமக்கு அறியக் கிடைக்கிறது.

1789 ஆண்டு ஜூன் 14ம் தேதி சுதந்திரத்துவம், சமத்துவம், பிரதிநிதித்துவம் (அரசனின் ஆலோசனைக் குழுக்களில்) என்று கோரிக்கைகளை முன்வைத்து பிரெஞ்சுப்புரட்சியின் போது பாரீஸில் பெண்கள் போர்க்கொடி உயர்த்தினர். ஆணுக்கு நிகராகப் பெண்கள் இந்தச் சமுதாயத்தில் உரிமைகள் வேண்டும் என்றும் வேலைக்கேற்ற ஊதியம், எட்டு மணிநேர வேலை, பெண்களுக்கு வாக்குரிமை, பெண்கள் பெண்ணடிமைகளாக நடத்தப்படுவதிலிருந்து விடுதலை வேண்டும் என்று பெண்கள் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். கிளர்ச்சிகள் என்றால் ஏனோதானோ வென்று இல்லாமல் அடுப்பூதும் பெண்கள், இடுப்பொடியப் பாடுபடும் பெண்கள், கையில் கிடைத்த ஆயுதங்களை எடுத்துக் கொண்டு பாரீஸ் நகரத் தெருக்களில் அணி திரண்டனர். புயலாகக் கிளம்பிய பூவையரைத் துரும்பாக எண்ணிய அந்நாட்டு அரசன் இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று கர்ஜித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோரைக் கைது செய்வேன் என அறிவித்தான்.

எதுவரினும் சந்திப்போம் என்று அஞ்சாமல் இரவு முழுக்க தெருக்கூட்டம் நடத்தி காலையில் அரசமாளிகை நோக்கி அணிவகுத்துக் கிளம்பினர் ஆயிரக்கணக்கான பெண்கள். அவர்களுக்கு ஆதரவாக ஆண்களும் ஆயிரக் கணக்கில் கலந்துகொள்ள, உற்சாகம் கரைபுரள கோஷங்கள் வானைப் பிளக்க, அரசமாளிகை நோக்கி ஊர்வலம் கொட்டும் மழையில் ஊர்ந்து சென்றது. அரசமாளிகை முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் கைது செய்வோம் என்று மிரட்டிய அரசனின் மெய்க்காப்பாளர் இருவரையும் திடீரெனப் பாய்ந்து தாக்கிக் கொன்றனர். இதைக் கேட்ட அரசன் அதிர்ந்துபோனான். கோரிக்கைகளைக் கண்டிப்பாகப் பரிசிலிப்பேன். உங்களுக்குச் சாதகமாக அறிவிப்பேன் என்று ஆர்ப்பாட்டத்தில் கொதித்தெழுந்தவர்களைச் சமாதானப்படுத்தினான். இயலாது போக அரசன் லூயிஸ் பிலிப் முடிதுறந்தான்.

இந்தச் செய்தி அய்ரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவிட



படிப்பகம்

www.padippakam.com

அங்கும் பெண்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். தொடர்ந்து கிரீஸில் லிசிஸ்ட்ரடா தலைமையில் ஜெர்மனி ஆஸ்திரியா டென்மார்க் நாடுகளைச் சேர்ந்த பெண்பிரதிநிதிகள் கலந்து கொண்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட, ஆளும் வர்க்கம் அசைந்து கொடுக்கத் துவங்கியது. அடிக்கிறபடி அடித்தால் தானே அம்மியும் நகரும். இத்தாலியிலும் பெண்கள் வாக்குரிமை கேட்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். பிரான்சில் புருஸ்ஸியனில் இரண்டாவது குடியரசை நிறுவிய லூயிஸ் பிளாங்க் பெண்களை அரசவை ஆலோசனைக் குழுக்களில் இடம்பெறச் செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்தான். அந்த நாள் 1848ம் ஆண்டு மார்ச் 8ம் நாள் தான் சர்வதேசப் பெண்கள் தினம் உலகெங்கும் அனுசரிக்கப்பட வித்தாக அமைந்தது.

## நியூயார்க்..

பெண்களுக்கு எதிரான கொடுமைகள் அகன்றிட உலக அளவில் அனைவரும் ஒருங்கிணைந்து பெண்களின் மேம்பாட்டிற்கான சில பொது நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்ற சிந்தனை உதயமான இடம். அமெரிக்கா. அமெரிக்காவின் தொழிற் புரட்சி நகர் நியூயார்க். இங்கு நெசவுத் தொழிலில் பெருமளவு பெண்கள் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் பதினாறு மணி நேரம் வேலை செய்து குறைவான ஊதியத்தையே பெற்றனர். அந்த ஊதியத்தைப் பெறுவதற்குக் கூட நிர்வா கத்தில் உள்ளவர்களின் உடற்பசிக்கு இணங்கினால்தான் கிடைக்கும் என்ற நிலை இருந்தது.

1857 நியூயார்க் நகரில் உழைக்கும் பெண்கள் கூடி குரல் எழுப்பினர். பெண்களின் முதல் குரல் ஒலிக்கத் துவங்கிய பொன்னாள்! தொடர்ந்து போராட்டங்கள், பெண்கள் அமைப்புகள் தோன்றின.

1908ல் எங்களுக்கு வாக்குரிமை கிடையாதா? என்று கிளர்ந்து எழுந்தனர். ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட்டே போராட்டத்தின் தாக்கம் கண்டு குலைந்து போனார். போராடினால்தான் உரிமைகள் கிடைக்கும் என்ற சிந்தனை உலகெங்கும் கிளர்ந்தெழுந்தது. அதன் விளைவு 1910ல் கோபன்ஹேகனில் சர்வதேசப் பெண்கள் மாநாடு கிளாரா தலைமையில் கூடியது.

## மார்ச் 8...!

அதன் தொடர்ச்சியாக சர்வதேச மகளிர் அமைப்பு தோற்றுவிக்கப் பட்டது. இந்த அமைப்பின் சார்பில் 1911 - ஆம் ஆண்டு மார்ச் 19 - ஆம் தேதி ஜெர்மனி, ஆஸ்திரியா, டென்மார்க் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலிருந்து, வந்து கலந்து கொண்ட, மகளிர் பிரதிநிதிகளின் முதல் சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடினர். இந்தக் கூட்டத்தில்தான் அரசன் லூயிச் பிளாங்க் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க ஒப்புதல்அளித்த நாளான மார்ச் 8 அய் நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் நாளை சர்வதேச மகளிர் தினமாகக்கொண்டாட முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றினர். இந்த மாநாட்டில் கலந்துகொண்டு திரும்பிய பெண்கள், ஜெர்மனியில் பெண்கள் வாக்குரிமை கேட்டு மில்லியன் துண்டுப் பிரசுரங்களை நாடெங்கும் வினியோகித்தனர். ஜெர்மனியில்மகளிர் துவங்கிவைத்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் உலகெங்கும் மகளிர் தங்கள் பிரச்னைகளுக்காகப் போராடவேண்டும்: போராடினால் தான் உரிமைகளைப் பெற முடியும் என்று எண்ணத் தலைப் பட்டுப் போராடத் துவங்கினர். அன்று துவங்கிய போராட்டம் இன்றும்



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து கொண்டிருக்கிறது. காலத்தின் தேவைக்கேற்ப அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன் வைத்துப் போராடி வருகின்றனர். இன்றைக்கு பெண்கள் இல்லாத துறைகள் உண்டா? மண்ணிலிருந்து விண் ணிற்கும், அலுவலரிலிருந்து ஆய்வாளர் வரையிலும் நிதியிலிருந்து நீதித்துறை வரையிலும் என்று சகலதுறைகளிலும் முகம் காட்டுகின்றனர். அதிகாரங் களில் தலைமைப் பதவிக்கும் வந்தனர். ஆண்களுக்கு நிகராகப் பலதுறைகளில் பிரகாசிக்கின்றனர்.

நோபல் பரிசுகளை வாங்கிக் குவித்தனர். ஆட்சியைப் பிடித்தனர். அப்படி ஆட்சியில் அமர்ந்தாலும் அவர்களாவது அங்காவது பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை முற்றிலுமாகக் களைந்தார்களா? களைய முடிந்ததா? என்றகேள்விகள் ஒரு புறம் வலுவாக எழுந்தாலும், அடிநாளில் அவர்கள் மனங்களில் எங்களாலும் முடியும் என்று விதைக்கப்பட்ட விதை இன்று விருட்சமாக வளர்ந்திருக்கிறது என்றால் மிகை யில்லை!

## பெண்களுக்கு எதிரி பெண்களேவா?

சிசு பிறந்ததும் பெண் எனத் தெரிந்ததும் நெல்லோ எருக்கம்பாலோ கொடுத்துக் கொன்றுவிடும் உசிலம் பட்டிக் கொடுமை கணவன், மாமியார், மாமனார் சித்திரவதை செய்து மண்ணெண்ணெய் ஊற்றி உயிரோடுபெண்ணை சமையலறையில் எரித்து விட்டு, ஸ்டவ் வெடித்து இளம் பெண் சாவு என்று காவல்துறைப் பதிவேடுகளில் மாறும் அவலம் : சமூகத்திற்கு அரணாக, வேலியாக இருக்கவேண்டிய காவல் நிலையங்களே கற்பழிப்பு மையங்களாகின்ற கொடூரம்- இவைகளெல்லாம் குக்கிராமத்திலிருந்து பெருநகரம் வரை அன்றாடம் நடைபெறும் செய்திகளாகிப் போய் விட்டன. நாட்காட்டிகள் கிழிபடுகிற ஒவ்வொருநாளும் பெண்கள் கிழிபடுகிற வதைபடுகிற சிதைபடுகிற சின்னா பின்னப்படுகிற செய்திகள் நாளிதழ் களில் இடம் பெறாத நாளுண்டா? ஆணும் பெண்ணும் சமம் என்கிறோம்: சமஊதியம் உலகில் பெரும்பாலான நாடுகளில் இன்றைக்கும் கூடக் கிடையாது என்பது துரதிஷ்டமானது. பெண்களே, நீங்கள்மூன்றில் ஒரு பங்காக முடங்கிப் போவதில் சம்மதமா? உங்களிடம் என்ன திறமையில்லை? ஆணுக்குப் பெண் ஈங்கு இளைப்பில்லை கண்டீர்-- "என்று எங்கும் எதிலும் துளிர்த்திடுங்கள். பெண்களுக்குக் குறைவான ஊதியம், பணியிடங்களில் மோசமான முறைகளில் நடத்துதல், பெண்களுக்கு வாக்குரிமை மறுப்பு, துறை அமைச்சர்களே துறைச் செயலாளர்களைத் துயிலுரியத் துணிந்திடும் அவலங்கள்... இப்படி பெண்களுக்குஎதிரான செயல்பாடுகள், கொடுமைகள் அகன்றிட, இனி ஒருநாளும் அனுமதியோம் என்று ஒவ்வொரு ஆணும்... ஏன் ஒவ்வொரு பெண்ணும் கூட சபதம் எடுத்துக்கொள்ள இந்தநாளில் முன்வருவோம்!

நன்றி : **கீற்று இணைய இதழிலிருந்து...**

**www.keetru.com**


படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் திரைவெளியில் பெண்ணுடல்

- அதங்கோடு அனிஷ்குமார்

## (சமகாலத்தமிழ்த் திரைப்படங்களை முன் வைத்து......)

''பெண்கள் பிறப்பதே ஆண்களுக்குக் கீழாகத்தான் என்கிற தந்திரமான உரிமை முறையை அங்கீகரிக்கிற எந்த ஒரு பிரதிநிதித்துவமும் பாலியல் மேலாதிக்கம் சார்ந்த ஒன்றுதான். பெண்கள் இயல்பாகவே பாலியல் உறவுகளில் ஆண்களுக்கு இணையானவர்கள் அல்ல என்ற கருத்திற்கு வலுசேர்த்து அது பெண்களை அதிகாரமற்றவர்களாக ஆக்குகிறது".

ஷோஹினி கோஷ்.

தற்காலத் தமிழ்த் திரைப்படச் சூழலில் பெண்களின் இருப்பும் பங்களிப்பும் குறித்த விவாதம் எழ வேண்டிய அவசியம் இருந்தும் அதற்கான சாத்தியப்பாடுகளற்ற சூழல் நிலவுவது வருத்தம் தருகிறது. தமிழ்த் திரைப்பட உலகின் ஆதிக்கக் கதவுகளை உடைத்துவிட்டுப் பெண் படைப்பாளிகள்,பின்னணிக் குரல்கள், பாடல்கள் என படைப்புச் சாதனைகள் தொடர்ந்து படைத்தும் தமிழ்த்திரைவெளி பெண்களின் உடல்களையே காட்சிப்படுத்துவதில் முன்நிற்பது இந்தியச்சூழலின் அவலம், இதில் அச்சு ஊடகமும் விதிவிலக்கல்ல என்பது நினைவில் கொள்ளத்தக்கது,

தமிழ்த் திரைப்பட உலகம் அபார சாதனைகளை நிகழ்த்திவிட்டதாக நாம் தோள்தட்டிக் கொண்டாலும் யதார்த்த பெண்பதிவுகளோ, மரபுடைக்கும் பெண்கள் பற்றிய பதிவுகளோ,. குறியீடுகளோ ,இல்லாதிருப்பது நம் சாதனைகள் பற்றிய மீள் பார்வையை வேண்டி நிற்கிறது.

தமிழ்ச் சமூகத்தைப் பிரதிபலிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழ்ப் படங்களில் பெண்கள் இல்லை என்பதே நம் கவலை.

பெண்களைப் பற்றிய மாதிரிகளை உருவாக்கித்தரும் நிலை தமிழ்ப் படங்களில் தொடர்ந்து நிலைநிறுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கணவனே கண்கண்ட தெய்வம் முதலான தமிழ்த் திரைப்படத் தலைப்புகளே இதற்குச் சாட்சியாக நிற்பதைக் காணலாம். குறிப்பாகத் திரைப்படப் பாடல்கள் முன் வைக்கும் வக்கிர வருணனைகள் பெண்கள் உடல்களையே மூலதனமாக்கி நிற்கின்றன. (இதுபற்றி விரிவான ஆய்வு நிகழ்த்தப்பட வேண்டும்) ஏனெனில், பெண்களைப்பற்றிய ஆணாதிக்க விதிகளை -பெண்களை, அவர்கள் குரல்களாலேயே பாடவைத்த பெருமை தமிழ்த் திரைப்படப் பிரம்மாக்களுக்கு உண்டு. சான்றாக பெண்ணை உணவுப் பொட்டலமாகக் குறுக்கிக்காட்டும் "இன்று முதல் இரவு நீ (பெண்) என் இளமைக்கு உணவு" எனும் வரிகள் நினைவை நெருடுகின்றன. நேருக்கு நேர் படப்பாடலில் "ஆணைவிடப் பெண்ணுக்கே உணர்ச்சிகள் அதிகம். அவள் வருவாளே" என்ற வரிகள் ஆதிக்க மனப்போக்கைத் தானே வலியுறுத்துகின்றன. பெண் மட்டும்தான் உணர்ச்சிமிக்கவளா? யார் பாலியல் பற்றி எப்போதும் சிந்திக்கிறார்கள் என்பதை நினைத்துப்பார்க்கையில் ஷோபாடே எனும் இந்தி - ஆங்கில எழுத்தாளர்.

**Men enjoy talking and thinking about sex far more than women. Women have better things to occupy their minds.(Surviving Men,45)**



படிப்பகம்

www.padippakam.com

எனக் குறிப்பிடுவதுதான் நம் நினைவுக்கு வருகிறது. பெண்ணை உணர்ச்சிப் பெருக்குடையவளாகக் காட்டுவதில் ஆதிக்க மனநிலையுடைய திரைப்பட உலகம் மகிழ்வதில் வியப்பில்லை. ஒவ்வொரு பாடல் காட்சியிலும் ஆண்கள் அதிக அளவு உடை அணிவதும் பெண்கள் குறைந்த பட்ச உடை அணிய வேண்டிய சூழலும் வேண்டுமென்றே நிகழ்த் தப்படும் வன்முறை அல்லாமல் வேறென்ன?

ஆண்மைய சமூகத்தில் பெண் உடல் ஒருவியாபாரத்தளம்.உடலே மூலதனமும் விற்பனைப் பொருளும். உடலே மூலதனமாக இருப்பதான தொனியில் கவர்ச்சி நடிகைகள் நேர்காணலின் போது பதிலளிப்பது கூட தன்நிலை புரியாத வார்த்தை வெளிப்பாடாகவே கொள்ளத் தோன்றுகிறது. அண்மையில் ரகஸ்யா எனும் கவர்ச்சி நடிகையின் நேர்காணலில் "சினிமா ஒரு டீம் ஒர்க். அதில் நான் ஒரு கமர்சியல் வேல்யூ" என்கிறார். (குங்குமம் 20.07.2006 பக்.125) பெண்கள் அடிமைகள் என்பதை அவர்கள் உணராதவண்ணம் அடிமைப்படுத்தியதுதான் ஆதிக்க சக்திகளின் சாதுர்யம் என்பதுதான் மறுக்க முடியாத உண்மை.

திரை உத்திகளில் ஒன்றான காட்சிப் படுத்துதலில் நகரும் புகைப்படக் கருவியின் கண்கள் பெண்ணின் ஒவ்வொரு உறுப்பையும் வலம்வருதல், பாடல் காட்சிகளில் வேண்டுமென்றே உடல் உறுப்புகளை முன்னிறுத்துதல் முதலானவை, பெண் உடல் அவளுக்கானதாக இல்லை என்பதை அறுதியிட்டுக் கூறுவதாகத்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

சான்றாக, இதயத்திருடன் படத்தில் காம்னா என்னும் நடிகை தன் தாய்க்குத் தக்க பாடம் பயிற்றுவிப்பதாக நினைத்து தன் உடல் அழகை வெளிக் காட்டுவதும் அதைப் பதிவுசெய்வதும், தொழில் நுட்ப யுகத்திலும் தந்தை வழிச் சமூகத்தின் எதிர்பார்ப்பைத் திருப்திப்படுத்தும் ஏற்பாடாகவே நிலைபெறுகிறது. அதேபோல் பச்சைக் குதிரை படத்தில் நமீதாவின் உடைமாற்றும் அறைக்கு அத்துமீறி நுழையும் ஒளிப்படக் கருவியின் கண்களுக்கும், சாவித் துவாரங்கள் வழி ஊடுருவும் கண்களுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை. இத்தகைய திரைப்பட இயக்குநர்களின் இலக்கு என்னவாக இருக்கும்? ரசிகர்களைத் திருப்திப் படுத்துவதாகப் பம்மாத்து செய்யும் இவர்களின் உள்நோக்கம், உடல் வேட்கையைத் தூண்டி விட்டு பொருள் ஈட்டுதல்தான். அதற்காக இவர்களின் ஒளிப்படங்கள் பெண்ணை நுகர்வுப் பொருளாகக் குறைக்கும் கொடூரத்தை நிகழ்த்துகின்றன. இத்தகைய போக்கைத் தான் "வாழும் பொம்மையாக பெண் இருக்கிறாள். ஒளிப்பட வருகைக்குப் பிறகு பெண்மையின் இரகசியத்தை அறிதல் முக்கியமானதாக இருந்தது. மறைக்கப் பட்ட உண்மையைத் தேடுதலே-- அதாவது இறுதியில் பெண்குறியைக் காணுதலே- விழைவின் பயணமாக மாறியது". (13) என சிவக்குமார் பதிவு செய்கிறார். காதல் கொண்டேன் படத்தில் வரும் பாடல் காட்சியில் நீர் நிலையில்- சோனியா அகர்வாலோடு தனுஷ் நிகழ்த்துவதும், ஹேராமில் இசைக்கருவியின் துணை யோடு கமலஹாசன் ராணி முகர்ஜியோடு கொள்ளும் உறவு நிலையும் இத்தகைய வக்கிர விளைவையே நிலைநிறுத்த விழைகின்றன.


படிப்பகம்

www.padippakam.com

இதுபோன்ற காட்சிகள் தற்காலப் படங்கள் வரை ஒரு பெருநோயெனப் பரவிக்கிடப்பதைப் பார்க்கலாம். இந்த நோயின் ஆரம்பம் தேடிப் பயணித்தால் இன்னும் சில நோய்க்கூறுகள் பார்வையில் விழுகின்றன. அவற்றில் குறிப்பாக வன்புணர்வுக் காட்சிளைக் காட்சிப்படுத்தும் விதம் வேட்கையைத் தூண்டுவதாக அமைவதை மையப்படுத்தாமல் இருக்க முடியாது. வன்புணர்வுக்குள்ளான பெண்ணின் மனநிலையைப் புறந்தள்ளி விடுகிற தமிழ்த் திரை உலகம் வன்புணர்வை இன்ப நுகர்வுக் காட்சியாக முன்நிறுத்துவதுதான் கொடூரமாகத் தெரிகிறது. பெண்களின் உடைகளையப்பட்டு ஒவ்வொன்றாகத் தூக்கி வீசப்படுதல், கொஞ்சம்கொஞ்சமாக பெண் உடலில் ஒளி பரவவிடுதல் எனத்தொடர்வது விட்டல்ராவ், குறிப்பிடுவது போல "வலிந்து காட்டி காசு சேர்க்கும் கும்பலின்" வேலை அல்லாமல் வேறென்ன? உடல் சிதைவை ஏற்படுத்தும் ஆணுக்கு ஆதரவாக பெண் எழவேண்டுமென்பதுதானே நம் முற்போக்கு லட்சியம். இல்லை எனில் புதிய பாதைக்கு விருது வழங்கி மகிழ்ந்திருப்போமா?

தனக்கு ஒரு பெண் கிடைக்க வேண்டும் எனில், அவளை வன்புணர்வுக்குளளாக்க வேண்டும் என்பது போன்ற கருத்தியல் ஆரோக்கியமான வாழ்வியலுக்கு சரியான முன்மாதிரி தானா? எவன் கெடுத்தானோ அவன் தலையிலேயே கட்டிவிட்டு பழி தீர்ப்பதாக நினைக்கும் ஆதிக்க மனநிலை, பாதிக்கப்பட்ட பெண்ணின் மனநிலையை ஏன் ஆராய மறுக்கிறது? சிவக்குமார் கூறுவதுபோல ''தன் உடலின் இன்பம் என்பது கூட அதிகாரத்தின் பிச்சையானது" (11) என்பதின் உள்ளீடு, மரபுகளைக் கொண்டாடும் அதிகார மையங்களின் மனநிலையன்றி வேறல்ல. ஆண் தன் இச்சையை நிலை நாட்டும் ஆடுகளம் என பெண்ணுடல் காட்சிப்படுத்தப்படுகிறது.

பெண்ணுடல் ஆணின் இச்சையை நியாயப்படுத்தும் போக்குகள் திரைப்படப் பார்வையாளனை இச்சையூட்டி இம்சைப் படுத்துகின்றன. வெறியூட்டும் போக்கு களையே எதார்த்தமெனக் கற்பிக்கின்றன. 16 வயதினிலே படத்தில் ஸ்ரீதேவியை தண்ணீரைக் கடந்து (உடை நனையாமல்) வரச்செய்யும் அவள் காதலன் (அவள் உடையை நனைத்துவிடுகிறாள் என்பது வேறு) அவள் உடை உயருவதை உற்றுக் கவனிக்கும் அவன் விழிகளில் வழியும் காமம், அதைத் தொடர்ந்து அவளின் இச்சையைத் தூண்டி இசையவைக்கும் அவளின் உடலில் விளையாடும் விரல்கள், குஷி படத்தில் "ஏன் என் இடுப்பைப் பார்த்தே" என ஜோதிகா கேட்பதும் அதற்கு விஜய் மறுப்பதும் காற்றின் தீண்டலில் மீண்டும் உடை விலக வைக்கப்படுவதும் அதைத் தொடர்ந்து வரும் காட்சியில் "உன் இத்துனூண்டு இடுப்பு'' என கதாநாயகன் கேலி செய்வதும் ஆணாதிக்க மன வெளிப்பாடுகளின் உயிர்ச்சான்றுகள். ஏனெனில் "பெண்மை (ஆண்) உடல் மற்றும் மனதைக் குலைக்கும் காரணி. இதனால் பெண் நிலை மற்றும் பெண் தன்மை ஆளப்படவும், கட்டுப்படுத்தவும் வேண்டியது என்பது ஒரு இந்திய பொதுப்புத்தியாகப் பரவிக்கிடக்கிறது" என்னும் பிரேம் ரமேஷின் வார்த்தைகள் சமகால சமூக எதார்த்தத்தின் நிஜமுகங்கள் எனத் தோன்றுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

பெண்ணுடல் என்பது நெறிகளற்ற பாலியல் வெறி கொண்டது என்ற எண்ணமுடைய மனுவின் மறு அவதார மனப்போக்குகள் தமிழ்த்திரைச்சூழலில் பெண்ணியம் பேசுவதான போர்வையில் தற்போது தலைகாட்டுகின்றன.

பெண்ணுடல் இச்சை நிறைந்த காடு. இதை நெறிப்படுத்துபவனாக ஆண் இருக்க வேண்டும் என்ற எண்ணம் பெண்ணின் சுயத்தை அழிப்பதில் நிலை பெறுகிறது. அண்மையில் வெளிவந்த வெற்றிப் படமான திருட்டுப்பயலே படத்தில் மாளவிகா ஏற்றுக்கொண்ட பாத்திரம் தன் இச்சைக்காக கணவனைத் தவிர இன்னொருவனை ஏற்றுக்கொள்வதும். அதே நிலையில் கணவன் மிக நல்லவனாகக் காட்டப்படுவதும் படத்தில் குறிப்பிடப்படவேண்டியவை. இதழ்களில் விளம்பரத்திற்காகக் கேட்கப்பட்ட கேள்வி "மாளவிகா பாத்திரத்தைக் கணவன் மன்னித்து ஏற்றது ஏற்புடையது தானா?" அவன் பெருந்தன்மையாக எல்லாம் தெரிந்தும், தன் மனைவியை ஏற்றுக்கொள்ளுதல் என்பது அவனைத் தெய்வ நிலைக்குக் கொண்டு செல்லுதல் என்பது எதிரிடைகளுக்குள்ளான வித்தியாசத்தைக் கொண்டாடும் கொடூரச் செயல்பாடு ஆகும். பெண் இச்சை அடக்கமற்றவள்; கணவனோ மிகப்பெரும் புலனடக்கம் உடையவன் என்பதை நிலைநாட்டுகிறார் இயக்குநர். இந்தியச் சூழலின் நினைப்பு, பெண்கள் விக்கிரகங்களைத் தொடக்கூடாது. ஆனால் ஆன்மீக நாட்டமுடன் இருக்கவேண்டும். தொட்டால் தீட்டாம், வேடிக்கை மனிதர்களின் ஆதிக்க உலகம் கற்பிக்கும் பாடம். இதேபோல் இதயத்திருடன் படத்தில் ஜெயம் ரவி ஒரு குளிரூட்டப்பட்ட அறையில் தன் காதலியைக் காப்பாற்றச் செல்லும் போது நாயகி (காம்னா) என்னோடு நீ உடலுறவுக்கு ஏங்கித்தான் வந்தாய் என்பது போன்று பேசுவதால் உடனே தன் இச்சையை அடக்கி, தொடாமல் நிற்பதும் நாயகி குளிர் தாங்காமல் நாயகனைக் கட்டிப் பிடிப்பதும் பெண், உடல்வெறியைக் கட்டுப்படுத்தத் திராணியற்றவள்; ஆணின் கண்காணிப்புக்கு உட்பட்டவள் என்ற மனுநீதிக் கோட்பாட்டைப் புதுப்பிக்கும் முயற்சியாகவே தோன்றுகிறது.

மிகப்பரபரப்பாக ஓடிய படமான உயிர் படத்தில் வரும் சங்கீதா ஏற்றுக் கொண்டிருக்கும் அருந்ததி பாத்திரம் (அருந்ததி பற்றி அறிந்தோர் பெயர்க் காரணம் அறிந்து அதிரவும்). கணவன் இருக்கையில் கணவனின் தம்பிக்கு ஆசைப்படுவதும் அதனால் ஏற்படும் பின்விளைவுகளும் படத்தின் மையமாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன. இங்கும் கதாநாயகன் மிகவும் நல்லவன்; இச்சை அடக்கம் கொண்டவன். அவனும் அவன் காதலியும் சேர்ந்து அருந்ததிக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கும் போது அவள் தன் உடல் தெரிய வந்து அமர்ந்து பாத்திட்டீங்களா என ஆடை சரி செய்தல் என உடலைக் காட்சிப் படுத்துவதன் உள்நோக்கம் எது?.. எதற்காக இந்தக் காட்சி திணிக்கப்பட்டது என்பது நாம் அறியாதது அல்ல. தன் கணவனால் திருப்திப்படாதவளாகக் காட்டி தன் மைத்துனரின் உடலுக்காக ஏங்குவது உட்பட அவனை அடைய முயற்சிக்கும் காட்சிகள் யாவும் பெண்ணின் காமவெறி, கணவனைக் கூடக் கொலை செய்யும் எனக்காட்டுவது நம் மரபு வழிப்பட்ட மனநிலையில் திருப்திப்படுத்துவதற்காகத் தான்.


படிப்பகம்

www.padippakam.com

தான் இறந்து போனால் தன் கணவனுக்கு வேறு பெண் பார்ப்பீர்கள் தானே; அப்போது எனக்கு? என அருந்ததி பேசும் வசனங்கள் பெண்ணியமாகத் தோற்ற மயக்கம் கொள்வதால் தமிழ் ரசிகர்களிடம் பெருத்த அதிர்வை உருவாக்கினாலும், படத்தின் இறுதியில் அருந்ததி தற்செயலான விபத்தால் சாகடிக்கப்படுவதன் மூலம் தமிழ்ரசிகன் திருப்திப்படுத்தப்படுகிறான். தமிழ் நாட்டுப்புறப் பாலியல் கதை ஒன்றில், திருப்தியுறாத பெண் ஒருத்தி சிவலிங்கத்தைத் தன் உறுப்பில் திணிப்பதாக கதை உண்டு (கி.ரா தொகுத்த நாட்டுப்புறப் பாலியல் கதைகள் எனும் தொகுப்பில் இக்கதை இடம்பெற்றுள்ளது) அந்தக் கதையும் இந்த அருந்ததியும் ஆணாதிக்கத்தின் கொடுங்கனவின் வெளிப்பாடுகள் தானே. அருந்ததியின் அட்டகாசம் என விளம்பர வரிசளோடு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது நினைவிருக்கலாம். முதன்மைப் பாத்திரங்களாகத் தோற்றமளிக்கும் பெருத்த வசூலை அள்ளித்தந்த படங்களான படையப்பா, மற்றும் சந்திரமுகி முதலான படங்களில் வரும் பெண்பாத்திரங்களான நீலாம்பரி, சந்திரமுகி ஆகியோர் மனநிலை பிறழ்விற்குள்ளானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களும் தனக்குப் பிடித்த ஆண் கிடைக்காத ஏக்கத்தில் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் என்பது தான் நினைவில் கொள்ள வேண்டிய செய்தி. மேலும் ரஜினி காந்தின், பெண்களுக்கு எதிரான பிற்போக்கு வசனங்கள் ஆணாதிக்க வெளியில் கொடூர மனப்பதிவெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. (இதுபற்றி விரிவான ஆய்வு நிகழ்த்த இடம் உண்டு).

தமிழ்த்திரையுலக வரலாற்றில் குடும்ப அமைப்பு சிதைந்து விடுமோ என்ற அச்சமே பல இயக்குநர்களை, குடும்பத்தைப் பல்கலைக் கழகமாக மாற்றத் தூண்டியிருக்கிறது (அது பல்கொலைக் கழகமாக இருப்பதும், பெண்ணுடல் வன்முறைக்குள்ளாவதும் தொடர்கதைகள் என்பதுதான் நடைமுறை) குடும்ப அமைப்பின் கொடூர ஆக்கிரமிப்பு பற்றி விரிவான ஆய்வு தேவைப்படுகிறது. ஏனெனில், குடும்பப் படங்கள் பெரும்பாலும் பெண்ணைப் போற்றும் பாவனையில் அவர்களை உறிஞ்சிவிட்டுத் தியாகத் திருவுருவங்களாக ஒதுக்கி வைக்கின்றன. ஏனெனில் நமக்கு தியாகிகளாகப் பெண்கள் வேண்டும். தாசியாக மனைவி வேண்டும் (தாசி என்பவள் பொருள் அடிமை என்பதை நினைவிற் கொள்க) கூலி இல்லாத வேலைக் காரிகளாகப் பெண்களை உருவாக்கும் குடும்ப அமைப்பு பற்றி விக்கிரமன்களும் பாலகுமாரர்களும் வியந்து பாராட்டட்டும். அதில் பாலியலைக் கலந்து, பெண்ணால் தனித்து இயங்க இயலாது என பாக்கியராஜ்கள் பாடம் நடத்தட்டும். குடும்பம் வன்முறையை முன்னின்று அரங்கேற்றும் ஆணின் அரங்கம். அதனால்தான் பெரியார், குடும்ப அமைப்பைக் காப்பாற்றும் திருமணத்தை வெறுக்கிறார். "கல்யாணம் செய்து கொள்வதே அடிமைப்பிரவேசம் என்றாகிவிட்டது" என்கிறார் (172-173).பெண்கள் இன்றித் தமிழ்த் திரையுலகம் இயங்குவது சாத்தியமற்ற சரித்திரம் என்ற நிலையே நிலவுகிறது. இந்த நிலையில் திரும்பத் திரும்ப குடும்ப அமைப்பை முன்னிருத்திப் பெண்களுக்கான மாதிரிகளை உருவாக்கித்தருவதன் மூலம்



படிப்பகம்

www.padippakam.com

ஆதிக்கச் சூழலைத் தக்கவைக்க முயற்சிக்கப் படுகிறது. இதுபோன்ற பிற்போக்கான முயற்சிகள் தொடரவேண்டுமா?

படைப்புத்திறன் கொண்ட பெண்ணை முட்டாளாக ஆக்குவது; அதுவும் அவளுக்கே தெரியாமல் அப்படி ஆக்கப்படுவதன் மூலம் யார் பயனடைகிறார் என்பது தெரிந்த செய்தி. அதனால்தான் குட்டி ரேவதி "இயல்பாகவே படைத்தளிப்பில் நுண்திறன் கொண்ட பெண்ணின் கைகளில் இருந்து எட்டாத உயரத்தில் வைத்துப்பார்க்கும் ஆணின் ரகசிய மனம் திரையிலும் பெண்ணை ஒடுக்கும்வசனங்கள்காட்சிப் படிமங்களில் ஊடுருவி அலைக்களிக்கிறது" (31) என்கிறார்.

திரைவெளியில் பெண்ணுடல் இச்சையின் உறைவிடமாக, சுயமற்ற பிரதியாக முன்வைக்கப்படுகிறது. எனவே இதுவரை பெண்களின் இருப்பு, திரைப்படம் எனும் மக்களின் (?) ஊடகத்தில் குறிப்பிடும்படி இல்லை. மேலும் ஆண்களுக்கான பெண்களே அதிகம் கடந்து போயிருக்கிறார்கள் என்பதே உண்மை. மேலும் அவர்களின் இருப்பே மெச்சப்படுகிறது. மீண்டும் மீண்டும் இராமன்களுக்கான சீதைகளே தயாரிக்கப்படுகிறார்கள். ஏனெனில் "ஆணின் காமஇச்சையைத் தூண்டி விடுவதற்காக அலங்காரம் செய்து கொண்டு காட்சியளிப்பதும் பின்பு அவ்வுணர்வை நிறைவு செய்வதும் பிள்ளை பெற்று வளர்த்து ஆளாக்குவதுமே பிறவி நோக்கம் என்று இவை பிரச்சாரம் செய்கின்றன" என அமர்ந்த்தா குறிப்பிடுவதுதானே தமிழ் திரைவெளியில் பெண்ணின் இடமும் இடம் பற்றிய இருப்புமான உண்மை நிலை. அதிகார வெளிகளில் இருந்து பெண் தன் உடலை விடுவித்து, தன் சுயத்தை அதன் ஆழத்திலிருந்து புலப்படுத்தி புனைவுகளை உடைத் தெறிந்து புறப்படும் காலத்தில் தான் பெண்களின் திரைப்படம் சாத்தியப் படும். அப்போது பெண்ணுடல் பற்றிய கற்பனைகளை விதைத்த வருணனையாளர்களின் அரிதாரங்கள் கலையும். கற்பிதங்களை உடைத் தெறிந்து விட்டுத் தங்களின் விழிகளின் வெளிச்சத்தில் பெண்கள் பயணிக் கையில் காலத்தின் கரங்கள் திரை விலக்கும். கலகங்கள் இன்றி இனி சாதனைகள் சாத்தியமில்லை எனும் போது எத்தனை நாளைக்குத்தான் திரைக்குப்பின்னால் இருந்து எட்டிப் பார்ப்பது?


## பயன்பட்ட நூல்கள்/ இதழ்கள்

ஷோஹினிகோஷ். பாலியல் மரபு: தணிக்கைத்துறை கூட்டணியா? ஒற்றுமையா?

(மலையாளத்தில் : ஸ்ரீஜித் குமார், தமிழில் ஏகலைவன்) நிழல் இதழ், மார்ச் 2003.

**shobha De. Surviving Men : The Smart Woman's, Guide to Staying on the Top. New Delhi : Penguin Books, 1997**

சிவக்குமார் : உடலே திரையாக (தகவல் தொடர்பு ஊடகங்கள்) பெங்களூர்: காவ்யா, 1995.

பிரேம்: ரமேஷ் சிதைவுகளின் ஒழுங்கமைவு: பின்நவீனத்துவப் பிரச்சினைப்பாடுகள் பெங்களூர் காவ்யா, 2000.

குட்டி ரேவதி, திரையில் பெண்ணும் பெண்ணின் திரையும். நிழல் இதழ் செப்டம்பர் - அக்டோபர் 2001.




படிப்பகம்

www.padippakam.com

கி.வீரமணி (தொ) பெரியார் களஞ்சியம் (ஐந்தாம் தொகுதி) பெண்ணுரிமை 1, சென்னை: பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை-600 007.

விட்டல் ராவ் தமிழ் சினிமாவில் செக்ஸ்-ஓர் ஆய்வு - நிழல் இதழ் - ஜனவரி - பிப்ரவரி 2002

கி.ரா. & கழனியூரன். நாட்டுப்புறப் பாலியல் கதைகள் சென்னை: நீலக்குயில், 1994.

## பேதம்

சின்னதாக,
பெரியதாக,
வட்டமாக,
நீளமாக,
புள்ளியாக,
கீற்றாக...
ஏதோ ஒரு வடிவத்தில்
ஒட்டிக் கொண்டிருக்க
வேண்டும் என்
நெற்றிப் பொட்டு,
உன் இருப்பைத்
தெரிவிப்பதற்காக!
வெறும் நெற்றியோடு
வலம் வந்தாலும்
உன்னை யார்
கேட்டுவிடப் போகிறார்கள்-
"உன் மனைவியை
இழந்து விட்டாயா!" என்று!

- பாலபாரதி

"சிலபொய்களும் சில உண்மைகளும் நூலிலிருந்து...

## சாலையோர வீட்டில்....

பயணநேரக் களிப்பின் போது
சாலையோர வீடுகளைக் கண்டு வியந்ததுண்டு

ஆனால்,
எனக்கான தோழர்களோ, சந்திக்க நேரும் நுபர்களோ
எவருமே சாலையோர வீட்டில் குடியிருக்கவில்லை

அடையாளம் காண சுலபமாய்
குறுகிய நடையில் போய்வர எளிதாய்;
தோழர்களோ, சந்திக்க நேரும் நபர்களோ
எவருமே சாலையோர வீட்டில் குடியிருக்கவில்லை

வாகனங்கள் எழுப்பும் சப்தங்கள் உளைச்சலைத் தருகின்றனவா?
என வீதிமீது நின்று தேநீர் பருகியபடி விசாரிக்க வாய்ப்பாய்
தோழர்களோ, சந்திக்க நேரும் நபர்களோ
எவருமே சாலையோர வீட்டில் குடியிருக்கவில்லை

வித்யா, மதுரை

## சாய்பாபாவின் முகத்திரை கிழிகிறது.

புட்டபர்த்தி சாய்பாபாவின் மோசடிகள் - கிரிமினல் குற்றங்களை சான்றுகளுடன் அம்பலப்படுத்தும் இணையத்தளம்

www. exbaba. Com



படிப்பகம்

www.padippakam.com

# பெண்களுக்கு – பெரியார் ஏன் தேவைப்படுகிறார்?

பெண்களுடைய முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் நம் நாட்டில் பல்வேறு தலைவர்கள் பாடுபட்டுள்ளனர். ஆனால் பெரியார் மட்டுமே பெண்களின் விடுதலைக்குக் குரல் கொடுத்தவர்; ஆணாதிக்கத்தை மிகச் சரியாக அடையாளம் காட்டியவர்.

மார்க்சியம், தமிழ்த் தேசியம், தலித்தியம் என அனைத்துத் தத்துவக் கூறுகளிலும் ஆணாதிக்கம் ஒளிந்து கொண்டு மவுனமாகவே ஆட்சி செய்து வருகிறது. இந்துத்துவத்தைச் சொல்லவே வேண்டாம். பெண்ணை அடிமையாக மட்டுமே வைத்திருக்கவும், சாதியப் படிநிலைகளைத் தக்க வைத்துக்கொள்ளவும், தீண்டாமையை நிலைநிறுத்தவும் மனிதரிடையே பிரிவினையை நிலைநாட்டவுமே இந்துத்துவம் நிறுவனமயமாகியுள்ளது. பிற மதங்களும் இதையே கூறுகின்றன.

ஆக, இந்துத்துவம் சார்ந்த இயக்கங்களில் பெண்களுக்கும், பெண் விடுதலைச் சிந்தனையாளர்களுக்கும் எந்தவித முக்கியத்துவமும் தரப்படுவதில்லை. ஆனால் பெரியார் ஒருவர் மட்டுமே தனது வாழ்நாள் முழுவதும் சாதியத்தையும், பெண்ணடிமைத் தனத்தையும் மிகச் சமமான முறையில் வைத்து எதிர்த்துப் போராடி வந்தார்.

பெண்களுக்கான தன் முனைப்பு, சுய தேடல், தன்மானம், பொருளாதாரத் தற்சார்பு, தன்னம்பிக்கை, கல்வி, வீரம், வன்மை, கோபம், ஆண்களுக்கு நிகரான செயல்பாடுகள் என தமது இடைவிடாதப் பிரச்சாரத்தால் தொடர்ச்சியாகவே வலியுறுத்தி வந்தவர் பெரியார்.

பெண்களை அடக்கி ஒடுக்கி வைக்கும் கூறுகளான தாய்மை, கற்பு, குடும்பம், திருமணம், பாசம், நேசம்,பெண்மை, பிறர்க்கெனவே வாழ்தல் முதலான அனைத்தையும் அக்கு வேறு ஆணிவேறாக ஆய்ந்து கேள்விக்குஉட்படுத்தியவர் பெரியார். பெரியார் இவற்றையெல்லாம் ஏன் மறுக்கிறார்?

**பெண்கள் ஏன் சடங்குகளைப் புறக்கணிக்க வேண்டும்?**

இயற்கையின் உடல் ரீதியான மாதவிடாய் வெளியேற்றத்தைப் பூப்புனித நீராட்டு என்ற பெயரில், அப்பெண் குழந்தை பெறத் தகுதியாகி விட்டாள். மீசை வைத்த எவரும் பெண் கேட்டு வரலாம் என்று தம்பட்டமடிப்பது பெண்களை அவமானப்படுத்துவதாகும். இது பெண்ணின் இயல்புகளையும், திறமைகளையும், ஒடுக்கிப் புறந்தள்ளிவிட்டு பெண்ணுக்கு திருமணமே வாழ்க்கையின் இலக்கு என்று கூறுவதாகிறது. ஆனால் ஆண் வயதுக்கு வருவதைக் (மீசை முளைத்து குரல் மாறி, விந்து வெளியேறுவதை ) கண்காணித்து விழா எடுப்பதில்லையேஏன்? ஆணுக்கு ஆளுமை, சம்பாத்தியம், பெண்டாளுதல் இவற்றைமுக்கிய இலக்காகச்சொல்வதன்றி வேறென்ன?

இது அநியாயமில்லையா? திருமணச் சடங்குஎன்பதும் பெண்களின் கல்வி வளர்ச்சி, பொருளாதாரத் தற்சார்பு, சுயசிந்தனை, தன்முன்னேற்றம் போன்றவற்றிற்குத் தடையாக உள்ளதால் பெரியார் இவற்றை வன்மையாகச்சாடுகிறார். இவை தவிர்த்த மனமொப்பிய சமத்துவ



படிப்பகம்

www.padippakam.com

சுகவாழ்வு முறையை ஆதரிக்கிறார் பெரியார். எனவே சுயமரியாதையுள்ள நாம் இச்சடங்குகளைத் தவிர்ப்போமே.

**தாலியை பெண்கள் ஏன் புறக்கணிக்க வேண்டும்?**

பெண் திருமணமானவர் என்று சமுகத்திற்கு அறிவிப்பதற்கும் இல்லாத பாதுகாப்பினைப் பெறுவதற்கும் (அப்படியானால் திருமணமாகாத பெண்ணை எவரும் என்ன வேண்டுமானாலும் செய்யலாமா? ), எப்போதுமே தன் கணவனாகிய ஆணின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவள் என்பதனை உணர்த்துவதற்குமான லைசென்சாகவே தாலி உள்ளது. மேலும் விதவை, சுமங்கலி என பாகுபடுத்தி விதவைத்தன்மை என்ற கொடூரத்தை நிலைநிறுத்தும் அடையாளச்சின்னமாகிறது தாலி. ஆனால் இந்த அடையாளமோ, கட்டுப்பாடுகளோ திருமணமான ஆணுக்கு இல்லாத போது பெண்ணுக்கு மட்டும் ஏன் தேவை எனக் கேள்வி எழுப்புகிறார்பெரியார். சுயமரியாதையுள்ள எந்தப் பெண்ணும் தாலியை அணிவரோ?

பெண்களை அழகுப் பதுமைகளாக்கி அவர்களை ஆண்களின் போகப் பொருளாகவும், ஆண்களின் அந்தஸ்தைப் பறைசாற்று வதற்கும் ஆண்களின் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருப்பதற்கும் , நகை மாட்டும் ஸ்டேண்டுகளாக ஆண்களே ஆக்கிவிட்டு, பெண்-நகைப் பித்துப் பிடித்தவள், பெண் என்றாலே செலவு, இதனால் லஞ்சம் கூட வாங்க வேண்டியிருக்கிறது என்று பெண்கள் மேலேயே குற்றம் சுமத்தப்படுகிறது . இதற்கு நாம் இலக்காகலாமா? பெண்ணின் உண்மையான அழகு அவளது ஆளுமைத்திறன், அறிவாற்றலில் அல்லவா இருக்கிறது? எனவே பெண்கள் நகைகளைப் புறக்கணித்து அறிவாற்றல், ஆளுமைதிறனை முயன்று வளர்த் தெடுத்து நம் உண்மை அழகை வெளிப்படுத்தலாமே! இந்த அழகு வாழ்நாள் முழுவதும் பெண்ணிற்குக் கை கொடுக்குமே.

**பெண்கள் மட்டுமே ஏன் கட்டாயமாகப் பொட்டு வைத்துக் கொள்ளவேண்டுமென வற்புறுத்தப் படுகிறார்கள்? அதைஏற்கலாமா?**

இந்துமதக் கோட்பாடுகளில் ஒன்றான சுமங்கலித் தன்மைக்கு அடையாளமாகவும் , அதன் மூலம் விதவைத் தன்மை என்னும் கொடூரத்தை நிலைநிறுத்தவும், மத ரீதியான மங்கலகரத்தைப் போற்றுவதற்கும் பெண்கள் பொட்டின் மூலம் பயன்படுத்தப் படுகிறார்கள். பொட்டு பற்றி புராணங்கள் ஆபாசமான கதைகளைக் கூறுகின்றன. எனவே சுயமரியாதையுள்ள பெண்கள் பொட்டினைத் தவிர்க்க வேண்டும்.

**பெண்கள் ஏன் முடிவெட்டிக் கொள்ளக் கூடாது எனச் சொல்லப்படுகிறது?.**

ஆண்களைக் கவரும், மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும் ஒரு கூறாகவும், பெண்கள் அதிக நேரம் செலவிடக் கூடியதாகவும், குறைவாக முடி காணப்பட்டால் அழகு இல்லையென வருத்தப்பட வைப்பதாகவுமே உள்ளது. பேன், பொடுகு, சிக்கு, வியர்வை, சளி இவற்றிலிருந்து விடுபட, விரும்பிய நேரத்தில் குளித்து மகிழ்ந்திட, நேரத்தை மிச்சமாக்கி பயனுள்ள வகையில் செலவிட முடியை வெட்டிக் கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இன்றைய பெண்கள் இதனைக் கருத்தில் கொண்டு பெரியார் காண விரும்பிய கிராப் வைத்துக் கொள்ளும் பெண்களாக மாறி வருகின்றனர். இது வரவேற்கக் கூடியதாகும்.

**பெண்கள் மட்டும் சேலை கட்டிக்கொள்ள வேண்டுமா?**

பெண்கள் சேலை கட்டிக் கொள்வது என்பது தமிழ்க் கலாச்சாரமாகவும், பண்பாடாகவும், கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டுமெனவும் ஆண்களால் குறிப்பாக தமிழ்ப் பண்பாட்டுக் காவலர்களால் வலியுறுத்தப்படுகிறது. இக்கருத்தானது பெண்கள் அடக்கமாகவும், ஒடுக்கமாகவும் இருக்க வேண்டுமென வலியு றுத்துகிறது. ஆம், பேருந்துகளில் இடக்கையைத் தூக்கினால் மார்பும், தொப்புளும், இடுப்பும் தெரியும் படியான அடக்க ஒடுக்கமான - அம்சமான உடை தான் இந்த சேலை. வேகமாக நடப்பதைத் தடுப்பதற்கும், ஏறிக் குதிப்பதைத் தடைசெய்வதற்கும், ஆபத்துக் காலங்களில் தப்பித்து ஓட முடியாமல் மாட்டிக் கொள்வதற்கும், மாராப்பு விலகுவதைச் சரி செய்வதிலேயே கவனம் இருப்பதற்குமான உடையாகவே சேலை இருப்பதால் பெண்களைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்குகிறது.

எனவே பெண்களுக்கு வசதியான உடையைப் (சுடிதார், கைலி, பேன்ட், சட்டை,) பரிந்துரைக்கிறார் பெரியார். பெண்கள் தங்களுக்கு விருப்பமான உடையை அணியலாமே!

**பெண்கள் மட்டும் கற்பினைப் போற்ற வேண்டுமா?**

ஆண்களே இல்லாவிட்டால் அங்கு 'கற்பு' என்ற வார்த்தைக்கு இடமே இல்லை. ஆனால் 'கற்பு' தன்மையானது பெண்களின் ஒழுக்கக் கோட்பாடாக சமூகத்தில் பின்பற்றப்படுகிறது. ஒருவனைத் தொட்டால் தீட்டு, பார்த்தால் பாவம் போன்ற சாதியத் தீண்டாமை அனுசரிக்கப்படுவது போல், பெண் பிற ஆண்களுடன் சரி சமமாகப் பழகினால், சமூக - அரசியல் தளங்களில் பணியாற்றினால், ஏன் அவள் விருப்பத்திற்கு மாறாக பாலியல் வல்லுறவுக்கு ஆட்பட்டால் கூட அவள் கற்பு கெட்டவளாக ஆணாதிக்கக் கருத்தியலோடு பேசப்படுகிறது. இந்த 'கற்பு' என்ற பூச்சாண்டியை வைத்தே பெண்களின் அனைத்துச் செயல்பாடுகளும் ஒடுக்கப்படுகின்றன. இத்தகைய 'கற்புப் பூச்சாண்டிகள்' ஆண்களுக்கு இல்லையே! இந்த சமத்துவமற்ற, பெண்களுக்கெதிரான பண்பாட்டு ரீதியாக, மத ரீதியாக திணிக்கப்படுகின்ற கற்புக் கோட்பாட்டினைப் புறந்தள்ளி, பெண்களைச் சுய சிந்தனையோடு முன்னேறச் சொல்கிறார் பெரியார். கற்பு என்பது ஒரு மாயை! அது உடைக்கப்பட வேண்டும், அழிக்கப்பட வேண்டும். இதற்கு 'ஆண்மை' என்ற வார்த்தையையே அடியோடு ஒழிக்க வேண்டும் என்கிறார் பெரியார். இக்கற்புக் கோட்பாட்டைப் பெரியார் மட்டுமே எதிர்க்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆக, மற்ற சீர்திருத்தவாதிகள் பெண்களின் மேமபாட்டிற்காக பல்வேறு கருத்துகளைப் பிரச்சாரம் செய்திருந்தாலும், அடிப்படையான பெண்ணடிமைக் கூறுகளைச் சமரசமின்றி அடையாளம் காட்டி உடைத்த பெரியார், அவற்றினை அகற்ற பெண்களே திரள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறார். அந்த அடிப்படையில் பெரியார் பெண்கள் இயக்கம் பெண்களை அறைகூவல் விடுத்து அழைக்கிறது.

புதிய பெண்ணியச் சிந்தனைகளை முன்னிறுத்துவோம்!

விழிப்படையவும், ஒருங்கிணையவும், செயல்படவும், தோழமைக்கும்...

**ச.எ.பார்வி, பெரியார் பெண்கள் இயக்கம்**
17பி, பாண்டியன் தெரு, பி.பி. குளம், மதுரை - 625 002.
பேச : 99449 68597, 0452 - 3043440

## உறவுகள்

சிரிக்கிறது சிரிக்கும் போது;
அழுகிறது அழும் போது
துடிக்கிறது துடிக்கும் போது
உனது உறவுகள்
பிரதிபலிக்கும்
நல்ல கண்ணாடியைப் போல
வெடிக்கிறது சிரிக்கும் போது
மறுக்கிறது அழும் போது
இறுகுகிறது துடிக்கும் போது
எமது உறவுகள் ரசமிழந்த
புராதனத்தில் ஒளிந்த கண்ணாடியைப்
போல நிஜத்தில்
கண்ணாடியைப் பேல் இருப்பதல்ல உறவுகள்
உணர்வுகள் படிந்த அதன் அதன்
உருவங்களுக்கேற்ப....

- லிவிங் ஸ்மைல் வித்யா, மதுரை

## உலகப் பெண்கள் நாளில்..

அன்பினிய தோழமைக்கு,
அன்பினிய தோழியருக்கு,
மகளிர் தின வாழ்த்துகள்.

மகளிர் தின வரலாற்றை எழுதி புதிதாக நான் எதையும் சொல்வதற்கில்லைதான். ஆனாலும் உங்களுடன் நிறையக் கதைக்க வேண்டும்.

நம்மைப் பற்றி நாமே பேச வேண்டிய தருணங்கள் இவை. அய்ந்து ஆண்டுகளுக்கு முன்பு மும்பை புறநகர்ப் பகுதியில் மின்சார வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது ஏற்பட்ட இனிய அனுபவம்; இரயில்வே போலீசாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பெண்களின் கூட்டம் அவர்களுக்கான சீருடையில். அதில் அதிகமாக இருந்தவர்கள் பஞ்சாபி சகோதரிகள் தான். அவர்களுடன் பேசிக் கொண்டே வந்த போது அவர் களுக்கான பயிற்சிகள் ஆரம்பத்தில் எவ்வளவு கடினமாக இருந்தது, எப்படி எல்லாம் அவர்கள் அந்தக் கடினமான பயிற்சிகளை எதிர்கொண்டார்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டு வந்தோம். அவர்களில் பலர் சொன்ன செய்தி:

அவர்களில் பலர் தொலைக் காட்சியில் அவர்கள் கண்ட 'உத் தியான்' என்ற இந்திமொழித் தொடரையும் அதில் வரும் கல்யாணி என்ற பெண் காவல்துறை அதிகாரியை தங்களுக்கான வழிகாட்டியாக மனதில் உருவகித்துக் கொண்டதைச் சொன்னார்கள். கல்யாணி என்ற கதாபாத்திரம், ஒரு சாதாரண பஞ்சாபி விவசாயக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து அய்பிஎஸ் அதிகாரியான பெண்ணின் வெற்றிப்பயணம். நானும் மிகவும்


படிப்பகம்

www.padippakam.com

ரசித்துப் பார்த்த தொடர். இன்றைய இளம் உள்ளங்களில் இப்படி ஒரு கனவை உருவாக்கும் தொடர் எந்த இந்திய மொழிகளிலாவது ஒளிபரப்பப் படுகிறதா? என்ன மாதிரியான முன்னுதாரணங்களை நாம் நம் இளம் பெண்களுக்கு நம் நடுவீட்டில் சின்னத்திரையில் வழங்கிக் கொண்டிருக்கிறோம் ?அண்மையில் ஈழத்துக் கவிஞர் பெண்ணியாவின் கவிதைகளை வாசித்த போது பெண்ணுக்கான இரு முகங்கள் இருப்பதை என் விமர்சனத்தில் குறிப்பிட்டேன். ஒன்று தானும் தன்னைச்சுற்றிய குடும்பமும். சமூகத்தின் ஓர் அங்கமாக - ஒரு மனுஷியாக தன்னை உணர்கிற போது அவள் எடுக்கும் முடிவுகளுக்கும், தன்னைச்சுற்றிய உறவுகளின் வட்டத்திற்குள் நின்று கொண்டு அவள் ஏக்கத்துடன் விடும் பெருமூச்சுகளுக்கும் நடுவில் நிறைய இட்டு நிரப்ப முடியாத இடைவெளி இருப்பதைக் காணலாம். இம்மாதிரியான இடைவெளி மட்டுமே விசுவரூபம் காட்டி நம்மைப் பயமுறுத்துகிறது.

'நான் நிஜங்களை நேசிக்கிறேன்...
சராசரி திருமணத்திலோ
உடல் உணர்தல்களிலோ
நான் திருப்தியுறுபவளல்ல
என் திருப்தி என்பதும்
விடுதலை என்பதும்
உங்களுள் அடக்கப்பட முடியாதவை
உங்களுள் உணர்த்தப்பட முடியாதவை ...
நான் வாழ்தலையும் மரணித்தலையும்
எனக்காய்ப் புரிய இசைகிறேன்
தீக்கிடங்கினுள் கிடந்து
நான் உயிர்வாழ்வதாய்க் கூச்சலிட
எத்தகைய பிடிப்புகளுமில்லை எனக்கு
என்று முட்களின் கதைகள் என்ற கவிதையில் முகம் காட்டும் அதே பெண்.

'வதைப்படலம்' என்ற
கவிதையில்
உனக்குத் தெரியுமா?
என் இதயத்தில்
எத்தனைக் கீறல்கள்
இருக்கின்றன என்று?
நானும் ஒரு
சராசரிப் பெண் என்பதை
எப்போதாயினும் நீ
உணர்ந்ததுண்டா? ..............
என்னைப் போன்றவர்கள்
எவ்வளவு இன்பமாய்
இன்னும் வாழ்ந்து கொண்டிருக்க
பார்த்துப் பார்த்துப்
பெருமூச்சு விடும்.
அபலையாகவே நான் இன்னும்.....'
என்று தன்னிரக்கம் சார்ந்து கண்ணீர் விடும் காட்சிகளைப் பார்க்கிறோம். ஒரு முன்னுதாரணத்திற்காகவே இங்கே பெண்ணியாவின் கவிதை வரிகளைக் குறித்துள்ளேன். இந்தப் போக்கு பெண் விடுதலை, பெண்ணியம் பேசும் அனைத்துப் பெண் கவிஞர்களிடமும் எப்போதாவது வெளிப்படத்தான் செய்கிறது. இதற்கு எவருமே விதிவிலக்கல்ல.

அப்படியானால் பெண் விரும்பும் விடுதலை எது? பெண்ணின் விடுதலைப் பயணம் எதை நோக்கி? என்ற கேள்வி எழுகிறது.

பெண்ணின் உடல்மொழி சார்ந்த கவிதைகளை/ கதைகளை எழுதினால் மட்டுமே அவர்களைப் பெண்ணியம் பேசும் படைப் பாளர்களாக முத்திரை குத்தி இருக்கிறோம்!. யோனி, முலை, அல்குல், என்ற


படிப்பகம்

www.padippakam.com

சொற்களையே தங்கள் பெண்ணியத்தின் ஆயுதமாகக் காட்டும் படைப்பாளர்களும், ஊர் நடுவில் பட்டப்பகலில் நிர்வாணமாக்கப்பட்டு கடித்துக் குதறப்பட்டு செத்த பிறகும் பெண்ணின் யோனியில் விழுந்து புணர்ந்த மனித மிருகங்களைப் பற்றி எதுவுமே எழுதுவதில்லையே? ஏன்?திருமணமே பெண்ணின் சிறை என்று சொல்லி அதை உடைக்கப் போகிறோமா?

அப்படி உடைத்துவிட்டு எந்த இடத்தில் நம்மை இருத்திக் கொள்ளப்போகிறோம்? இல்லை, திருமண உறவும் குடும்பமும் வேண்டும், அதில் சில உரிமைகள் வேண்டும் என்று தீர்மானங்களுடன் இருக்கிறோமா?

என்ன மாதிரியான உரிமைகள்? காலையில் எழுந்து பத்திரிகை வாசிப்பதிலிருந்து ஊர்க்கோடியிலிருக்கும் காபிக் கடைக்கு காலையிலேயே போய் பெஞ்சில் உட்கார்ந்து சூடாகக் காபியைக் குடித்துவிட்டு அன்றைய செய்தித்தாளைப் புரட்டிப் பார்த்துவிட்டு அரசியல் அரட்டை அடிக்கும் உரிமை வேண்டும் என்று சொல்லப் போகிறோமா?

என்ன மாதிரியான உரிமைகள் நமக்கு வேண்டும். ஆணும் பெண்ணும் சமம் என்று புரிந்தும் புரியாமலும் சொல்லிக் கொண்டு காலத்தைக் கழிக்கப் போகிறோமா? இல்லை பெண் ஆணிலிருந்து வித்தியாசமானவள், இந்த வித்தியாசம் என்பது அவள் தாழ்ந்தவள் என்பதற்கான அடையாளம் அல்ல. இதையே மாற்றியும் சொல்லிக் கொள்ளலாம். ஆண் பெண்ணிலிருந்து வேறுபட்டவன். இந்த வேற்றுமை, அவனை எவ்விதத்திலும் உயர்ந்தவன் என்று காட்டும் அடையாளமல்ல என்ற புரிதலுடன் நம் தலைமுறையை வழிநடத்தப் போகிறோமா?

முகத்தில் அடித்தாற்போல நம்மை நோக்கி நிகழ்காலம் எழுதியிருக்கும் கேள்விகளுக்கான பதிலைத் தேட வேண்டிய தருணம் வந்துவிட்டது வாருங்கள்.....

அன்புடன்
**புதியமாதவி,** மும்பை.


## அறிவுச்சுடர் வெளியீடுகள்

**பெண்ணுரிமைப்போர்**- ஓவியா- உருவா 12/-
**வாஸ்து அறிவியலா?** ந.வெற்றியழகன் உருவா-12/-
**சுஜாதாவின் கோணல்பார்வை**-ந.வெற்றியழகன் உருவா-12/
(எழுத்தாளர் சுஜாதாவின் ஒருவிஞ்ஞானப் பார்வையிலிருந்து நூலுக்கான மறுப்பு நூல்)
**காதலுக்குக் கருமாதி** - பாமரன் உருவா 1/-
அஞ்சல் செலவு இலவயம்
நூல் கிடைக்குமிடம் அறிவுச்சுடர் வெளியீடு, 7ஆ எறும்பீசுவரர் நகர், மலைக்கோயில் தெற்கு, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி-620013.



படிப்பகம்

www.padippakam.com

# மணியம்மையும் குஷ்புவும்

- பூ.மணிமாறன்

தற்போது தமிழ் சினிமாத் தளத்தில் பல பிரச்சனைகள் மிக சூடான முறையில் விவாதிக்கப் படுகின்றன. அத்தகைய விவாதங்களைப் பார்க்கும்போது சினிமாவின் வீச்சு எந்த அளவிற்கு மக்களிடம் சென்றுள்ளது என்பதை உணர முடிகிறது. இத்தகைய விவாதங்கள் ஆரோக்கியமான முறையில் நடைபெற்றால் நாம் அவ்வனைவற்றும் வரவேற்கவே செய்வோம். ஆனால் அவை அராஜகப் போக்காக மாறி விடுகின்றன. இவ்விவாதங்கள் முடிவில் பெண் விடுதலைக்கான குரல்களாக மாறும்போது நமக்கு மகிழ்வைத் தருகிறது.

சிறிது காலத்திற்கு முன்னர் தங்கர்பச்சான் என்ற இயக்குநர் மற்றும் ஒளிப்பதிவாளர் மூலம் பிரச்சனை ஆரம்பமானது. மிகச்சிறந்த தொழில் திறமை வாய்ந்த ஒளிப்பதிவு நிபுணர் அவர். இவரது படத்தில் நடித்த நவ்யாநாயர் எனும் நடிகை குறித்து இவர் சொன்ன கருத்துக்குக் கடும் எதிர்ப்பினைச் சந்தித்தார். குறிப்பாகப் பிறநடிகைகள் குரல் கொடுத்தது வரவேற்கத் தக்கதாகும் நடிகைகள் பற்றி அவர் சொன்ன கருத்திற்கு, தங்கர்பச்சானைக் காலில் விழ வைத்தனர் சில நடிகைகள். அப்போது ஆண்களிடம் ஆணாதிக்கம் எவ்வளவு குமுறியது என அறிய முடிந்தது. அப்பிரச்சனை நடிகர் சங்கப் பிரச்சனையாக ஆக்கப்பட்டு சுமுகமாக முடிக்கப்பட்டது.

பின்னர் குஷ்பு என்ற நடிகை ஒரு பத்திரிக்கைக்கு அளித்த நேர்காணல் பிரச்சனைக்கு உள்ளாக்கப்பட்டது. கற்பு கோட்பாட்டை அவர் அவமதித்ததாகக் கூக்குரல் எழுப்பினர்.

கற்பு கோட்பாட்டை கட்டிக் காக்கக் கூடிய தமிழ் இலக்கியங்களில் பண்பாட்டில்கலாச்சாரத்தி ல் பெண்களின் நிலை என்ன என்று ஆராய்ந்தோமானால், மிகவும் கீழான நிலை (அ) இருட்டடிப்பே செய்யப் பட்டுள்ளனர். அக்காலத்தில் ஆண் புலவர்களைப் புகழ்ந்ததைப் போல, பெண்பாற் புலவர்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடைபெற்றனவா? நடைபெறஇயலாது. காரணம், பெண் புலவர்கள் பற்றிய தரவுகள் காணப்படாமை தான். பெண்களின் வாழ்க்கை முறையும் குறிப்பிடத் தக்கதாகக் காணப் படவில்லை.

இவர்கள் கூறும் கற்பு எனும் கோட்பாடுதான் என்ன? ஒரு ஆண் ஒரு பெண்ணை தொடுவதா? முத்தமிடுவதா? உடலுறவு கொள்வதா? மனதால் நினைப்பதா? இதில் எது கற்புக்கான நிபந்தனை? எதனைக் கற்பு என வரையறை செய்வது? ஒரு பெண்ணைக் கற்புடையவள் என எதை வைத்து அறுதியிடுவது? இதில் கற்பு என்பது ஆண்களுக்கானது இல்லையா? பெண்ணுக்கு மட்டும் தானா? ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பினைப் பொதுவில் வைப்போம் எனப்பாடிய சமரசத்திற்கு உள்ளாகும் பாரதியாரை விட பெரியார் மிகத் தெளிவாகக் கற்பு பற்றிப் பேசுகிறார். கற்பு என்பதே இல்லை என்கிறார்; கற்பும் கடவுளும் ஒன்றுதான் - ஏனெனில், இரண்டுமே இல்லாதவை தான் என்கிறார். பெண்களை ஒடுக்கும் ஒரு ஆணாதிக்கக் கூறு தான் கற்பு எனத் தெளிவாகப் பகர்கிறார் பெரியார். அத்தகைய கற்புக்கு உரிய பெண்ணாக கண்ணகியைக் காண்பிப்பதும் சரிதானா? ஏற்க முடியுமா?



படிப்பகம்

www.padippakam.com

பெரியார் கண்ணகியை ஒரு பெண்ணாகவே ஏற்கவில்லை; ஒரு பெண்ணடிமையாகவே காண்கிறார். கணவன் கோவலனால் இழைக்கப்பட்ட கொடுமைகளின் போது மௌனியாக இருந்த பிற்போக்குத்தனமான கண்ணகியை ஏற்க முடியாது; கற்பையும் ஏற்க முடியாது.

சரி, இறுதியாக ஒரு விசயத்தைக் காண்போம். கற்பு பற்றிய தவறான கருத்தைச் சொன்ன நடிகை குஷ்பு, மணியம்மையாக நடிக்கக் கூடாது என்கின்றனர் தமிழ்க்காவலர்கள். அதாவது, தனது வாழ்நாள் முழுவதும் சாதிஒழிப்புக்காகவும், பெண்ணடிமை ஒழிப்பிற்காகவும் சுற்றுச்சுழன்ற பெரியாரின் வாழ்க்கைத் துணைவி தோழர் மணியம்மையாக, பெரியார் எதிர்த்த கற்பு பற்றி, கருத்திசைவுடன் நடைமுறை எதார்த்தமாகக் கருத்துத் தெரிவித்த குஷ்பு நடிக்கக் கூடாது. என்னே விந்தை இது! பெரியார் இன்று இருந்திருந்தால், "போங்கடா வெங்காயங்களா"என்று தனக்கேயுரிய பாணியில் தமிழ்க் காவல்காரர்களைச் சாடியிருப்பார். சத்யராஜ் கூற்றுப்படி தோழர்.மணியம்மையார் வேடத்தில் நடிக்க சரியானவர் குஷ்பு மட்டுமே. கருத்தியல் ரீதியாகவும் சரி, முக ஒற்றுமைப்படியும் அவரே மணியம்மையாக நடிக்க உகந்தவர். இப்படிப் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் பெண்ணைச் சுற்றியே நிகழ்கின்றன. ஆண் நடிகர்களை மையப்படுத்தி விவாதம் வருவதில்லையே ஏன்? இறுதியாக, பெரியார் பேணிய பெண் விடுதலையை வாழ்க்கை முழுவதும் பிரச்சாரம் செய்யக்கூடிய, ஏற்றுக்கொண்டுள்ள தோழர்கள் சார்பாக சில வினாக்களை முன் வைக்கிறோம் .

1. தோழர் மணியம்மைக்காகக் குரல் கொடுப்பவர்கள், மணியம்மை ஏற்றுக்கொண்ட தலைவரான பெரியார் மீது அவரது கருத்தியல் மீது முழு உடன்பாடு கொண்டவர்கள் தானா?
2. பெரியாரை ஒரு பெண் 'பித்தர்' என்ற தொனியில் பெரியாரின் பெண் விடுதலைக் கருத்தியலை காலச்சுவடில் தூற்றிய (விமர்சித்த ) இரவிக்குமாரின் ( ச. ம. உ ) கருத்துக்களை இவர்கள் எதிர்க்கிறார்களா? ஆதரிக்கிறார்களா?.
3. பெண் விடுதலை, பெண் முன்னேற்றமான இன்றைய வாழ்க்கையில் 'கற்பு' என்ற கற்பிதத்திற்குச் சரியான விளக்கத்தை இவர்களால் அளிக்க முடியுமா?
4. அ(மு)ன்னாள் முதல்வர் செயலலிதா கற்புக்கான கண்ணகி சிலையை எடுத்தபோது ஆதரித்தவர்கள் இன்னாள் முதல்வர் கருணாநிதி கண்ணகி சிலையை வைத்து போது மௌனம் காத்தது ஏன்?
5. தமிழர் வீட்டுப் பெண்களைக் கேவலமாகப் (பெண்கள் கர்ப்பத் தடுப்பு சாதனத்துடன் வெளியே வாருங்கள் ) பேசியவர்கள், உடலுறவு மட்டுமே கற்புக்கான நிபந்தனையாக வைக்கிறார்களா?
6. பெரியாரைத் தங்களது அரசியல் போதைக்கு ஊறுகாயாக அவ்வப்போது தொட்டுக் கொள்ளாமல் இம்மண்ணுக்கான தலைவரான பெரியாரின் அனைத்து விடுதலைச் சிந்தனைகளையும் ஏற்கின்றனரா?
7. தங்களை முன்னிலைப் படுத்தும் பிரபலமான விளம்பரத்தைத் தரும் திரைத்துறை மட்டுமே இவர்களது இலக்கா? அல்லது தங்களை நம்பி வாக்களித்த மக்களின் வாழ்வியல் மேம்படுவது தான் தமது இலக்கா?



படிப்பகம்

www.padippakam.com

8. இவற்றுடன் தோழர் ஞாநி அடிக்கடி ஊடகங்களின் வாயிலாகக் கேட்டும் வினாக்களை இணைத்துக் கொள்ளலாம். இத்தகைய விவாதங்களில் ஈடுபடுவோர் அறி-வு நாணயத்துடன் மேற்கண்ட வினாக்களுக்குச் சரியான பதிலை அளித்திடக் கோருகிறோம். தங்களுக்கு வசதியான ஒளிந்து கொள்ளும் 'மௌனம்' மட்டுமே பதிலாகத் தராமல். நேர்மையான பதிலைத் தாருங்கள் ஆரோக்கியமான விவாதங்களை முன்னெடுங்கள்.

அலைபேசி : 99444 - 68536.

## வாழ்க்கைத் துணையேற்பு

சிறந்த கட்டுரையாளரும், புராண ஆபாசங்களைத் தோலுரித்து 'விடுதலை' நாளேட்டில் அவ்வப்போது கட்டுரை எழுதி வருபவரும், மறைந்த பேராசிரியர் சாலை இளந்திரயனின் உற்ற தோழருமான, தோழர் குடந்தய் வய்.மு.கும்பலிங்கனின் மகன் குமணவழகன் - சகபசிறீ இணையரின் வாழ்க்கைத் துணையேற்பு நிகழ்வு 22.02.2007 அன்று குடந்தையில் நடைபெற்றது. விழா மகிழ்வாக உருவா 100/-நன்கொடை அனுப்பியுள்ளனர். நன்றி!

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொற்கோ-காந்தமருத்துவர் கோ.பூங்கோதை இணையரின் பெயரன் அன்புவாணனின் 5-ஆவது பிறந்த நாள் மகிழ்வாக உருவா 100/- நன்கொடை அனுப்பியுள்ளனர். நன்றி!

# நிகழ்வுகள்

'தமிழ்க்கலை இலக்கிய பேரவை' நடத்திய புலவர் கு. கலியபெருமாள் எழுதிய "மக்கள் துணையோடு மரணத்தை வென்றேன்" நூல் அறிமுகவிழா 11.03.2007 ஞாயிற்றுக் கிழமை திருச்சிராப்பள்ளி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் அய்க்கப் அரங்கில் நடைபெற்றது. தோழர் வே.பூ.இராமராசன் தலைமையில் தணிக்கையாளர் மு. குமாரசாமி நூலினை வெளியிட வழக்குரைஞர் தோழர் த.பானுமதி பெற்றுக் கொண்டார். தோழர் கவித்துவன் நூலறிமுகவுரையாற்ற , தோழர் பெ. மணியரசன் சிறப்புரையாற்றினார்.

மெய்யாத்தூர் சொ.வேல்முருகன் எழுதிய "தெருவோரப் பூக்கள்" கவிதைத் தொகுப்பு நூல் அறிமுகவிழா 18.03.2007 ஞாயிறு மாலை திருச்சி, கலையரங்க கூட்ட அரங்கில் நடைபெற்றது. கவிஞர் கி.கிருஷ்ணமூர்த்தி நூலறிமுகவுரை யாற்றினார். பாரதிதாசன் பல்கலைக் கழக ஆங்கிலத்துறையின் முன்னாள் தலைவர் முனைவர் கா. செல்லப்பன் நூலைப்பற்றி மிகச்சிறப்பான தொரு மதிப்பீட்டுரையை ஆற்றினார். நூலாசிரியர் வேல்முருகன் ஏற்புரை யாற்றினார்.

தலித் விடுதலைக்குக் கலைகளையும் கருவிகளாக்குவோம் என்ற முழக்கத்தினை முன்வைத்து, தலித் ஆதாரமய்யம் நிகழ்த்திய "தலித் கலைவிழா" 17.03.2007 அன்று மதுரையில் நடைபெற்றது.

தோழர் வையவன் எழுதிய "மனசு சுற்றிய மாவளி" கவிதை நூல் அறிமுக விழா 17.03.2007 காரிக்(சனி) கிழமை மாலை வேலூர் நகர் மன்றத்தில் நடைபெற்றது.


படிப்பகம்

www.padippakam.com

அச்சாணி பெண்கள் கூட்டமைப்பும் சாம்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்திய உலகப் பெண்கள் தினவிழா 11.03.2007 அன்று விக்கிரவண்டியில் நடைபெற்றது. தோழர்கள் சுப.வீரபாண்டியன் ,பெ.தமயந்தி, அஜிதா, உமாராணி, மு.அந்தாலன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதிதாசன் உயராய்வு மய்யத்தின் சார்பில் மார்ச்சு 26,27, ஆகிய இருநாட்கள் "பாவேந்தர் பாரதிதாசன் பல்திறப்படைப் பாளுமை" என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது.

## சாதிமறுப்பு, சடங்குமறுப்பு வாழ்க்கை இணை ஏற்புவிழா

கல்பாக்கம் தோழர் சு-முத்து -நீலாம்பாள் இணையரின் மகன் நீ-மு-முத்து, மறைமலைநகர் கேசவன் -நாகலெட்சுமி இணையரின் மகள் நா.கே.கவிதா ஆகியோரின் சாதி மறுப்பு - சடங்கு மறுப்பு இணையேற்பு விழா 18.03.2007 ஞாயிறு அன்று கல்பாக்கம் நகரியம் பல்நோக்குக் கூடத்தில் நடைபெற்றது. விழாவில் தோழர்கள் பழ.நெடுமாறன், பெமணியரசன், மா.பொழிலன் அரங்க.குணசேகரன், புலவர் இரா.இளங்குமரன் ஆகியோர் பங்கேற்றுக் கருத்துரைத்தனர்.

தமிழ்வழிப் பள்ளிக்குழந்தைகளின் தமிழிசை நடனம் நடைபெற்றது. அன்பளிப்பு கொடுப்பதைத் தவிர்க்குமாறும் , தவிர்க்கவியலாதவர்கள் கொடுத்த தொகையினை, குமுக எதிர்ப்பாற்றல்களால் (சமூகவிரோதிகள் )இடிக்கப்பட்டு அதே இடத்தில் மீண்டும் கட்டப்பட்டு இயங்கும் பள்ளிக்கரணை பாவாணர் தமிழ்வழிப்பள்ளி முதல்வரிடம் விழா மேடையிலேயே அளித்ததும் சிறப்பான நிகழ்வாகும்.

உங்கள் பாராட்டினைத் தெரிவிக்க : சு.முத்து, 44, 52ஆம் தெரு அணுவாற்றல் நகரியம், கல்ப்பாக்கம். தொலைபேசி 044-27488526 அலைபேசி 99943-88526

## வேலூர் தமிழியக்க விழா

பெரியார்-கோரா-குஞ்சிதம் குருசாமி படிப்பகம், சிங்காரவேலர்-பாவேந்தர் - அம்பேத்கர் இயக்கம் இணைந்து வேலூர் தோழர் நா.ப.செந்தமிழ்க்கோ முன்முயற்சியில் முழு முயற்சியில் நடத்திய கருத்தரங்கம், தாய்மொழி விடுதலை ஈக மறவர்களுக்குப் பாராட்டு, என்று மிகப்பெரிய ஏற்பாட்டில் வேலூரில் 10.03.2007, 11.03.2007 ஆகிய இருநாட்கள் விழா நடைபெற்றன. ஓர் இயக்கம் செய்ய வேண்டிய, செய்யத் தவறிய செயல்களைத் தனிமனிதராக இருந்து நடத்திய தோழர் நா.ப.செந்தமிழ்கோ பாராட்டுக்குரியவர். ஆனால் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ள நிலையில், தொண்டு ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு பல்லாயிரக்கணக்கில் செலவு செய்து (இலட்சத்தைக் கூடத் தாண்டுகிற அளவில்), இவ்வளவு பணம், உழைப்பு நேரம், முயற்சி இவற்றைச் செலவு செய்து நடத்தும் நிகழ்ச்சியில் 50லிருந்து 100 பேர்தான் கலந்து கொள்கிறார்கள் என்கிறபோது வேதனைதான் மிஞ்சுகிறது.

விழாவில் பழ.நெடுமாறன், கோவை ஞானி, திருவாரூர் தங்கராசு, புலவர் இரா.இளங்குமரன், இரா.இளவரசு, கு.அறவாணன், தியாகு, இராசேந்திர சோழன், மா.பொழிலன், பாவலர் தமிழேந்தி மற்றும் பலர் உரையாற்றினர்.



படிப்பகம்

www.padippakam.com

# மாற்றிதழாய் வந்த இதழ்கள்:

**மனிதநேயம்** - மதுரை, **புன்னகை** பொள்ளாச்சி, **தென்செய்தி** - சென்னை, **தெளிதமிழ்**- புதுச்சேரி, **தமிழர்முழக்கம்** - பெங்களூர், **கவனகர் முழக்கம்** - சென்னை, **கண்ணியம்** - சென்னை, **பெரியார்முழக்கம்** - சென்னை, **மக்கள் செங்கோல்** - சென்னை, **பன்மலர்**-சென்னை, **ஆய்வுக்களஞ்சியம்**-நாகர்கோயில் **வளர்தொழில்**-சென்னை, **மனிதஉரிமைக் கங்காணி** - மதுரை, **திராவிடசமயம்** - சென்னை, **முங்காரி** - கோவை, **ஒளிநெறி** - பல்லடம், **தங்கமங்கை** - சென்னை, **ஊற்று** - பெங்களூர், **வளரும் தமிழ்உலகம்** - ஈரோடு, **சன்முரசு** - கரூர், **உறவுக்குரல்** - மதுரை **அனலி**-நாகர்கோயில், **தாரகை** - பட்டிவீரன்பட்டி, **பரபரப்புச் செய்தி** - சென்னை, **மாந்தன்** - புதுச்சேரி, **நகைமுகன்** - பெங்களூர், **புதிய புத்தகம் பேசுது** - சென்னை **அறிவுக்கொடி** - சென்னை, **கிழக்குவாசல்** - திருத்துறைப்பூண்டி **சட்டப்பார்வை** - சேலம், **பெண்ணே நீ** - சென்னை, **மன்னர்மலர்** - கோவை, **செம்பருத்தி** - **மலேசியா பயணம்** - விருதுநகர், **உறவு** - புதுச்சேரி **யாதும் ஊரே** - சென்னை, **எழுகதிர்** - சென்னை, **நற்றமிழ்** - புதுச்சேரி, **குடிமக்கள் முரசு** - சென்னை, **மகாகவி** - வத்தலக்குண்டு, **மீண்டும் கவிக்கொண்டல்** - சென்னை, **நாற்று** - புதுச்சேரி, **கடலார்** - சென்னை, **மனிதமேம்பாடு** - திருச்சி, **செய்திக்கனல்** - திண்டுக்கல், **தமிழ் கம்ப்யூட்டர்**-சென்னை, **தொழில் உலகம்** - சென்னை, **தமிழ்ப்பூ** - தேவகோட்டை, **சோலைக்குயில்** - கல்லக்குறிச்சி, **வண்ணப்பூங்கா** - சென்னை, **விடியல் சம்புகன்** - திண்டுக்கல். கரூர் **மக்கள் களம்** - கரூர், **ஓமியோபதி** - மதுரை, **சமுதாய முரசு** - நெய்வேலி, **சுருதகேவலி** - திருவண்ணாமலை, **மக்கள் நெஞ்சம்** - சென்னை, **தேசிய வலிமை** - மதுரை, **சக்தியுகம்** - கோவை, **தேமதுரத்தமிழோசை** - மதுரை, **நந்தவனம்** - திருச்சி, **இலட்சியப் போராளி** - மதுரை, **தமிழ்ப்பணி** - சென்னை, **புதிய காற்று** - மதுரை **தமிழ்ப்பாவை** - மதுரை, **உங்கள் பாரதி** - புதுச்சேரி, **பதிப்புத் தொழில் உலகம்** சென்னை, **சௌந்தர சுகன்**-தஞ்சாவூர், **நடவு** - திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), **பயணம்** - மதுரை, **சுற்றுச்சூழல் புதியகல்வி** - திண்டுக்கல், **மக்கள்களம்** - சென்னை, **என்லைட்டர்**-கோவை, **அரும்பு** - சென்னை, **சுவடுகள்**-மதுரை, **தன்னம்பிக்கை** - கோவை, **இளங்கதிர்** - கோவை, **அதிர்வு**-கடலூர், **இலண்டன் சுடரொளி** - இலண்டன், **தமிழ்த்தேசம்**-சென்னை, **கருநாடக அறிவுச்சுடர்** - பெங்களூர், **தமுக்கு** - மதுரை, **நற்றிணை**-ஆரணி, **வானகமே வையகமே** - சென்னை, **கலை** - சென்னை, **கனவு** - திருப்பூர்



படிப்பகம்

www.padippakam.com




## கருநாடகத் தமிழரின் உரிமைக்குரல் தமிழர் முழக்கம்

ஆசிரியர்: வேதகுமார், THAMIZHAR MUZHAKKAM, NO487, 15th cross, IInd Stage, Indranagar, Bangalore - 560 038 தொலைபேசி : 080 25250252 அலைபேசி; 093418 - 75503



## தமிழ்த்தேசிய விடுதலை இயக்கத்தின் மாத இதழ் தமிழ்த்தேசம்

ஆசிரியர் : தியாகு
தொடர்புக்கு: சிவ.காளிதாசன், 1220 (29/36) இராணி அண்ணாநகர், சென்னை-78.
அலைபேசி:92832 22988
மின்னஞ்சல் : thozharthiagu@yahoo.co.in

## தமிழியக்கலை இலக்கிய மாத இதழ் 'புகழ்ச்செல்வி'

ஆசிரியர் : பரணிப் பாவலன்
தொடர்புக்கு : தமிழியல் பேரவை, 731-அரசியர் தோட்ட அடுக்ககம், 77/78, வேளச்சேரி முதன்மைச் சாலை, கௌரிவாக்கம், சென்னை-601302
அலைபேசி : பரணிப்பாவலன் - 98401 53646
பறம்பை அறிவன் 94440 32093


## காவிரித்தீர்ப்பு-எரிப்புப் போராட்டம்

தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி. தமிழ்த்தேச விடுதலை இயக்கம். தமிழ்த்தேசிய முன்னணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்கள் நடத்திய காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பு நகல் எரிப்புப் போராட்டத்தில் கைதானோர் எண்ணிக்கை சென்னை-22, தஞ்சை-38, மதுரை-19, சிதம்பரம்-40, கோவை -10, பொள்ளாச்சி-10, திருச்செந்தூர்-18, பெண்ணாடம் -15.

செய்தி : **கதிர்நிலவன்** மதுரை.

*************************

## வேண்டுகோள்

1960-61 "நாத்திகம்" இதழில் புட்டபர்த்தி சாய்பாபாவை அம்பலப்படுத்தி தோழர் நாத்திகம் பி.இராமசாமி 52 வாரங்கள் தொடர்கட்டுரை எழுதியிருக்கிறார். அதன் படிகள் இருப்பின் அருள் கூர்ந்து அனுப்பி உதவுங்கள். படிகள்திரும்ப ஒப்படைக்கப்படும். நகல் எடுத்து அனுப்பினால் உரிய தொகை அனுப்புகிறோம்.

தொடர்புக்கு ; ஆசிரியர், நாத்திகம்
55,என்.எசு.கே.சாலை
கோடம்பாக்கம் , சென்னை-24
தொலைபேசி : 044 - 42134024



படிப்பகம்

www.padippakam.com

## கவிதை & கட்டுரைப்போட்டி

************************

தலைப்பு :

### கடவுளுக்குப் பெண் தீட்டா?

கவிதை ; எந்தப் பா இனத்திலும் (புதுப்பா, மரபுப்பா) இருக்கலாம் . 24 வரிகளுக்கு மிகாமல் கட்டுரை: தட்டச்சிலோ, கணினி அச்சிலோ A4 அளவில் 4 பக்கங்களுக்கு மிகாமல்.

முதல்பரிசு:உருவா 250/-க்கான நூல்கள்
இரண்டாம்பரிசு : உருவா 150/-க்கான நூல்கள்
மூன்றாம்பரிசு:உருவா 100/-க்கான நூல்கள் (இரு போட்டிகளுக்கும் தனித்தனியே மூன்று பரிசுகள்)

தொடர்புக்கு : நாளை விடியும்.
தமிழ்ச்சுடர் இல்லம், 7ஆ, எறும்பீசுவர் நகர், (காவேரி சிற்றங்காடி எதிரில்) மலைக்கோயில் தெற்கு, திருவெறும்பூர், திருச்சிராப்பள்ளி- 620013.

கடைசி நாள் : **30.09.2007.**

ஏன் இந்தப் போட்டி?

பெண்ணை இழிவானவளாக மதங்கள் போதிக்கின்றன. சபரிமலையில் பெண்கள் உள்ளே வரக்கூடாதுஎன்ற அடாவடித்தனமும், இந்து அறநிலையத்துறை அலுவலராகப் பெண்கள் வரக் கூடாது என்ற கூக்குரலும் காலந்தோறும் ஓங்கி ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன. பார்ப்பனியம் சூத்திரனை இழிவாகக் கேவலப்படுத்தினாலும் சூத்திரனுக்கு மான உணர்ச்சி வந்து பார்ப்பனியக் கருத்தியல்களுக்கு எதிரான கோபாவேசம் கொள்வதில்லை என்பது எவ்வளவு உண்மையோ, அதே போன்றே இந்துமதப் பார்ப்பனியக் கருத்தியல் பெண்களைக் கேவலப் படுத்துகிறது; கொச்சைப்படுத்துகிறது; ஒடுக்குகிறது என்ற உண்மை தெரியாமல் பெண்கள் முடங்கிப் போய்க் கிடக்கிறார்கள். பெண்ணை இழிவுபடுத்தும் இதுபோன்ற கருத்துகள் நம்சமகால நிகழ்வுகளாய் இருக்கையில் இது தொடர்பான கவிதை கட்டுரைப் போட்டி நடத்தும் எண்ணத்தில் தான் இந்த அறிவிப்பு.

## உங்களிடமிருந்து...

அன்புள்ள தோழருக்கு, சனவரி - பிப்ரவரி இதழ் ஆசிரியவுரை நன்று. தமிழகத்தில்பகுத்தறிவு, ஆட்சியாளரிடம் மட்டுமின்றி, ஆண்கள்-பெண்கள் அனைவரிடமும் 2007-இல், ஊடகங்களின் திட்டமிட்ட சீர்குலைவுப் போக்குகளால், மிகவும் கீழே போய்க் கொண்டிருக்கிறது. எனவே பகுத்தறிவைப் பரப்பும் ஏடுகளும் நூல்களும் இன்று மிகத் தேவை. பகுத்தறிவு இயக்கம் பல வழிகளிலும் விரிவடைய வேண்டும்; வலுப்பெற வேண்டும்.

இதழில் இடம் பெற்ற தோழர் பூ.அரகுப்புசாமியுடனான நேர்காணல் மிகவும் குறிப்பிடத்தக்கது.

தோழமையுடன்
**தி.க.சி.திருநெல்வேலி**

அன்புடன் தோழர் அரசெழிலனுக்கு வணக்கம். பூ.அர.குப்புசாமியுடனான நேர்காணல் சிறப்பாக இருந்தது. கடைசிப்பக்க மருதநாடன் கவிதை வழக்கம் போல சாட்டையடி.

**சங்கமித்ரா, சென்னை-48.**

இதழின் ஆசிரியவுரை நன்று, முன்னாள் பகுத்தறிவாளர் மு.கருணாநிதியின் இன்றைய செயல்பாடுகள் மிகவும் சரியில்லை. வேண்டாத ஆன்மிகப் பேர்வழிகளை அளவுமீறிப் புகழ்வது கேவலமானது. பதவி வந்து விட்டால் நல்லவைகள் பத்தும் பறந்து போகும் என்பது உண்மையாகி வருகிறது. மடமையில் இருந்து அறிவு பெற்று, மீண்டவர்கள் மீண்டும் அதே மடமைச் சேற்றில் நீந்துவது ஏனென்றே விளங்கவில்லை. இருந்த கொஞ்சநஞ்ச கொள்கைகளையும் இப்படி சாய்பாபாவுக்காக கருணாநிதி பறக்கவிட்டிருக்க வேண்டாம்.

தோழர் பூ.அர.குப்புசாமியின் நேர்காணலில் அனைத்துச் செய்திகளையும் மிகச் சரியாகத் தெளிவாகக்கூறியுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

வினாக்களும் சிறப்பாக அமைந்துள்ளன. தமிழகக் கட்சிகள், இயக்கங்கள் பற்றி மிகச் சரியாகவே கூறியுள்ளார்.

–ச.நாத்திக நந்தனார்,
சென்னை–48.

அன்பினிய தோழர் அரசெழிலனுக்கு, ஆசிரியவுரை முதல் நேர்காணல் வரை பெரியாரியலை முன்வைத்து சிந்தனைத் தெறிப்புகளுடன் வந்திருக்கும் நாளைவிடியும் (இதழ்-56) இதழுக்கு என் வாழ்த்துகள். கலைஞர் - சாய்பாபா - செயகாந்தன் - முரசொலி அறக்கட்டளைப் பரிசு இக்கருத்துகளை முன்வைத்து திண்ணை மின்னிதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். வாய்ப்பிருப்பின் படியுங்கள். தோழர் பூ.அர.குப்புசாமியின் நேர்காணல் அருமை. கலப்பு மணம் செய்தவர்களுக்கு இடஒதுக்கீட்டில் முன்னுரிமை போன்ற கருத்துகள், காவிரி பற்றிய விழிப்புணர்ச்சி வந்துவிடக் கூடாது என்று கலைஞர் பிடிவாதமாக இருக்கிறார் என்று தெளிவாகச் சொல்லும் துணிச்சல் பாராட்டுதலுக்குரியது. சாதிமறுப்பை உள்ளடக்கித்தான் சுயமரியாதைத் திருமணங்கள் நடக்கின்றனவா? என்ற தோழர் தென்றலின் கேள்வி நியாயமானது. தோழர் ருத்ரனின் "தெலுங்கானா போராட்டத்தின் நியாயப்பாடுகள்" என்ற கட்டுரை "தேசிய இனங்களின் உரிமை" என்ற மய்யப் புள்ளியைச் சுற்றி மிகச் சிறப்பாக எழுதப்பட்டுள்ளது.

– புதிய மாதவி, மும்பை–42.

அனைத்துப் படைப்புகளும் சிந்தனையைத் தூண்டக்கூடியதாக இருந்தன். சாதி, தாலி, சடங்கு மறுத்த முற்போக்குத் திருமணம் பற்றிய செய்தியையும் இதழ் மூலம் அறியமுடிந்தது.

–பூம்புகார் வெ.வேழ, சென்னை–19.

**தோழர்.பூ.அர.குப்புசாமி மடல்**

அன்பார்ந்த அரசெழிலன்,.வணக்கம். என் பேட்டி சென்ற நாளை விடியும்'' இதழில் வந்துள்ளது. மகிழ்ச்சி. எழுத்துப் பிழைகள் உள்ளன. குறிப்பாக தோழர் தா.பாண்டியனை ஒருமையில் போடப்பட்டுள்ளது.அவர் எனக்கு மூத்தவர்; ஒரு கட்சியின் தலைவர்; நீண்டநாள் நண்பர். எனவே ஒருமையில் இருப்பது சரியல்ல. நானே தவறுதலாகக் கூறியிருந்தாலும் ஆசிரியர் என்ற முறையில் நீங்கள் திருத்தி Edit செய்து போட்டிருக்க வேண்டும்.

## காதலர் நாள்

– சா.மா. அறிவுக்கண்ணு

"நட்பின் உயர்நிலை காதல்"
நவின்றிற்றார் நம் அண்ணல்
மா. இலெ. தங்கப்பா!
நட்பின் உச்சத்திலே காதல்!
ஆனால் இன்று நட்பதோ
பணத்தின் மிச்சத்திலே காதல்!
வாழ்நாள் காதல் இன்று
வாழ்த்து அட்டைகளில் முடிகிறது!
'கண்ணோடு கண் இணை நோக்கு ஒக்கின்
வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல'
தமிழர் வாழ்வியலின் தந்தை
வள்ளுவர் நவின்றிட்ட
நம் உயர் காதல்
இன்று அறிவுக் கண்ணில்லா
இளைஞர்களிடத்தே இளம்
அகவைக் கோளாறில் முடிகிறது!

## பெண்ணிய இணைய இதழ்

பெண்ணியம் தொடர்பான செய்திகள், பெண் எழுத்தாளர்களின் படைப்புகள் காண:

www.thozhi.Com
www.pennkal.Com


படிப்பகம்

www.padippakam.com

# ஆணுக்குப் பெண் நிகரானால் குழந்தைகளுக்கும் நல்வாழ்வு

- என்.கங்கா

பெண்கள் நாட்டின் கண்கள்! இந்தக் கூற்று முற்றிலும் உண்மை! பெண்ணியவாதிகள், அறிவியல் வல்லுநர்கள், சமூக இயல் வல்லுநர்கள், தேசப்பற்று கொண்டவர்கள், பொருளாதார வல்லுநர்கள், மருத்துவர்கள், திட்டமிடுபவர்கள், அரசியல்வாதிகள் ஆகிய எல்லாத் தரப்பினருக்கும் இதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. பெண்களின் சம உரிமையும், குழந்தைகளின் நல வாழ்வும் கைகோர்த்து நடைபோடுகின்றன. பெண்களுக்கு எல்லாக் கோணங்களிலும் சம உரிமை வழங்கப்பட்டு பெண்களின் நிலை முன்னேற்றம் அடைந்தால் பெண்களின் நல்வாழ்வும், குழந்தைகளின் நல்வாழ்வும் உறுதி செய்யப்படும்.

உலக சுகாதார நிறுவனம் புத்தாயிரம் ஆண்டில் முன்னேற்றத்தின் குறிக்கோள் என்று 10 கருத்துகளை அறிவுறுத்தியிருக்கிறது. அதில் மூன்றாவது குறிக்கோளாக பெண்களுக்கு சம- உரிமை மற்றும் பெண்கள் மேம்பாடு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது வெற்றிகரமாக நடந்தேறினால் இரட்டை அறுவடை பயன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்!

ஆண்-பெண் சமத்துவத்தின் இரட்டைப் பலன்கள் என்பதை 2007 ன் கருத்தாக அய்க்கிய நாடுகள் குழந்தைகள் அமைப்பு யுனிசெப் வலியுறுத்துகிறது.

2007-ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தின் கருத்து - மகளிருக்கு இழைக்கப்படும் வன் கொடுமைகளுக்குச் சட்டப்படி ஒரு முடிவு என்பதாகும்.

உலக அளவில் பெண்களுக்கு சம உரிமை என்பது பெரிய அளவில் பேசப்பட்டாலும் கோடிக்கணக்கான பெண்களின் நிலைப் பரிதாபத்திற் குரியதாக இருப்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது. சிறு வயதில் திருமணம், தாய்மார்கள் இறப்பு, செய்யும் வேலைக்குக் குறைவான சம்பளம், உடல் மற்றும் பாலியல் ரீதியான கொடுமைகள், பணி இடத்தில் இகழ்ச்சி, தகுந்த பாதுகாப்பும், நீதியும் கிடைக்காத நிலை என்ற பற்பல அம்புகள் ஒரே நேரத்தில் பெண்களைத் தாக்குகின்றன.

இரட்டைப்பலன் எப்படிக் கிடைக்கும்? ஆரோக்கியமான, படித்த, சக்தி படைத்த பெண்ணுக்கு ஆரோக்கியமான, அறிவுள்ள, திட சிந்தனையுள்ள, மகனும், மகளும், அமைவார்கள்! அந்தப் பெண்ணிற்கு குடும்பத்தில் முடிவு எடுக்கும் உரிமை இருந்தால் குடும்பத்தின் ஊட்டச் சத்து, நல்வாழ்வு, மருத்துவ சேவைகளைத் தகுந்த நேரத்தில் அடைதல், பொருளாதார மேம்பாடு என்ற பல விதமான பயன்கள் கிடைக்கின்றன.


படிப்பகம்

www.padippakam.com

ஒரு பெண்ணின் வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் சிக்கல்களும் போராட்டங்களும்தான்! இந்த பாரபட்சம் பிறக்கும் முன்பே ஆரம்பித்து இறுதிநாள் வரை தொடர்கிறது. பெண் கருக்கலைப்பு, பெண் சிசுக்கொலை, இது இந்த நூற்றாண்டில் மிகப்பெரிய தீமை!

பெண் குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி கூட முழுமையாகக் கிடைக்கவில்லை. தொடக்கப்பள்ளியில் சேரும் 5 பெண்களில் ஒரு பெண்ணுக்கு ஆரம்பக்கல்வி கூட கிடைப்பதில்லை. அவள் 5ஆம் வகுப்பு வருவதற்குள் பள்ளியில் இருந்து நிறுத்தப்படுகிறாள். 15 சதவீதம் பெண்கள் மட்டுமே கல்லூரிப் படிப்புக்குச் செல்கிறார்கள்!

18 வயதிற்குக் குறைவான பெண்ணுக்குத் திருமணமும், குழந்தைப் பிறப்பும் சட்டப்படி தடைசெய்யப்பட்டுள்ளது. ஆனால் 30 சதவீதம் பெண்களுக்கு முதல் குழந்தை 18 வயதிற்குக் கீழ் பிறந்து விடுகிறது. கருப்பை மற்றும் இடுப்பு எலும்புகள் முழு வளர்ச்சி அடையாத நிலையில், வாழ்க்கையை எதிர்கொள்ள உரிய மனமுதிர்ச்சியும் அடையாத பெண்ணுக்குக் குழந்தை பிறப்பு! இதனால் பெண்கள் மற்றும் குழந்தைகள் மரணம் அடைவது அதிகமாகிறது.

தாய் கருவுற்ற சமயத்தில் இரண்டு உயிர்களுக்கு ஊட்டச்சத்துக் கிடைக்காததால் தாய் மேலும் உடல் மெலிந்து அடிக்கடி நோய் வாய்ப்படுகிறாள். அந்தத் தாய்க்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைகிறது. குழந்தை எடை குறைவாக, குறைமாதமாக, எதிர்கால வளர்ச்சித் திறன் குறைவாகப் பிறக்கிறது. அந்தக் குழந்தை பெண் குழந்தையானால், வளர்ச்சி குறைவாக எதிர்ப்பு சக்தி இல்லாத, ஒல்லியான பெண்ணாக வளர்ந்து அது பேறு காலத்தை எட்டும்போது நிறைய இன்னல்களை அனுபவிக்க வேண்டி வருகிறது. இது ஒரு தொடர்பிரச்சினையாகி விடுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 5 லட்சம் பெண்கள் தாய்மைப்பேற்றின்போது இறக்கிறார்கள்! அதாவது ஒரு நிமிடத்திற்கு ஒரு தாய்! வளர்ந்து வரும் ஏழை நாடுகளில் இந்த இறப்பு இன்னும் அதிகம் ! 2000-ஆம் ஆண்டில் உலக அளவிலான தாய் மார்கள் இறப்பில் 25 சதவீதம் இந்தியாவில் . என்ன கொடுமை!

வளர்ந்த நாடுகளில் 4 ஆயிரம் தாய்க்கு ஒரு தாய் என்ற அளவில் இறக்கிறார்கள்! அடிப்படை பேறுகாலக் கவனிப்பு இருந்தாலே இந்த இறப்புகளைப் பெரிய அளவில் தவிர்க்க முடியும்! தாய் இறந்த பிறகு அந்தக் குழந்தைகளிடையே இறப்பு விகிதம் அதிகம் தான் என்கிறது ஒரு புள்ளிவிவரம்.

வயது முதிர்ந்த பிறகு பெண்களுக்குப் பிரிவினையும், பாகுபாடும் தொடர்கிறது. இயற்கையாகவே பெண்கள் அதிக நாள்கள் உயிர் வாழ்கிறார்கள். வயது முதிர்ந்து உழைக்கத் திறனின்றி, வருவாய்க்கும் வழியின்றி, நோய் நொடியுடன், கடமைக்கு உணவு அளிப்பவர் மத்தியில் வாழும் முதிய பெண்மணிகள் மனத்தளவில் இறந்தவர்கள் தான். அரசு மூலமாகவும், சட்டரீதியாகவும், இவர்களுக்கு பாதுகாப்புக் குறைவு!

எங்கெங்கு ஆணுக்குச் சரிநிகர் சமமாகப் பெண்கள் நடத்தப்பட வேண்டும்? வீட்டுப்பொறுப்புகளில், வீட்டை நிர்வகிப்பதில், வீட்டு நிதி நிர்வாகத்தில் மகளிர்க்கு சம உரிமை இருக்குமானால், வேலைக்குத் தகுந்த கூலி பெண்களுக்கும் கிடைக்குமானால், அவளது குடும்பம் மேன்மேலும் உயரும்.



படிப்பகம்

www.padippakam.com

தான் ஈட்டிய பணத்தை எப்படிச் செலவிடுவது, குழந்தைகளுக்கும் கணவருக்கும், முதியவர்களுக்கும், தகுந்த படிப்பு, எதிர்காலச் சேமிப்பு போன்ற எல்லாக் கோணங்களிலும் பெண்களின் பங்களிப்பு இருந்தால் குடும்பம் உயர்வடையும்.

பெண்கள் அரசியலில் இருந்தால் நாட்டின் அமைதி, பாதுகாப்பு, வளமை வலுப்பெறுகிறது என்பதும், நாட்டில் அமைதிப்பேச்சு வார்த்தையில் பெண்கள் இருந்தால் அதன் முடிவு நாட்டிற்குச் சாதகமாக இருக்கிறது என்றும் நிரூபித்து இருக்கிறார்கள். என்று அடங்கும் இந்த ஆண்களின் ஆதிக்கம்!

பெண்களுக்குச் சம உரிமை மறுக்கப்படுவதும்ச், அவர்களைக் குறைவாக மதிப்பிடுவதும் உலக அளவில் ஒன்றாகத்தான் இருக்கிறது.

உலக அளவில் 150 நாடுகளில் எடுக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பின்படி ஆண்களின் கருத்து என்ன தெரியுமா? ஆண்கள் தான் சிறந்த அரசியல் தலைவர்களாகச் செயலாற்ற முடியுமாம்! நிறையப் பணியிடங்களில் ஆண்கள்தான் அமர்த்தப்பட வேண்டும்.

பணி வாய்ப்புகள் குறைவாக இருக்கும்போது ஆண்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும். பெண்களைவிட பல்கலைக்கழகப் படிப்பு ஆண்களுக்குத்தான் முக்கியம். இந்த நிலை என்று மாறும்?

7 முக்கிய அம்சங்கள் மூலமாக பெண்களுக்குச் சம உரிமை என்ற குறிக்கோளைப் படிப்படியாக அடையலாம் என்று உலகளாவிய அமைப்புகள் தெரிவிக்கின்றன.

கல்வி, பொருளாதாரச் சீரமைப்பு, சட்டங்கள், ஆட்சியில் அதிக பங்கு, பெண்கள் முன்னேற்றத்தில் ஆண்களை ஈடுபடுத்துதல், பெண்களே பெண்களின் ஆக்கசக்தியை ஊக்குவித்தல், தேவைப்பட்ட அளவு ஆராய்ச்சிகளும், புள்ளிவிவரங்களும் சேகரித்து - அதன் அடிப்படையில் முன்னேற வழி வகுத்தல், திட்டமிடுதல். பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டால் பெண்களின் திறன் அதிகரித்தால் தான் குழந்தைகளுக்கு நல்வாழ்வு கிட்டும். இது இரட்டிப்புப் பலன் அல்லவா?

பெண்களின் சக்தியை ஓங்க வைத்து, அதைத் தகுந்த அளவில் பயன்படுத்தினாலன்றி, எந்த ஒரு சமுதாயமும், நாடும், நிலைத்த, நீடித்த வளர்ச்சியை அடைய முடியாது. பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெண்கள், குழந்தைகள் முன்னேற்றத்திற்கும் பெண்களுக்கு சம உரிமை அளிப்பதைத் தவிர வேறு ஓர் ஆயுதம் இருக்க முடியாது!

கொள்கைகளை ஏற்படுத்தி, அறிவித்து கூட்டங்கள் நடத்துவதால் மட்டும் பெண்கள் முன்னேற்றம் கைகூடி விடாது. பெண்களுக்கு நல்ல கல்வி, அரசில் பங்கு, பொருளாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகள், நல்ல மருத்துவ சேவைகள், உடல் மற்றும் மனரீதியான சட்டப் பாதுகாப்பு கிடைக்கும் நாள் எந்நாளோ, அந்தப் பொன்னான நாளில் தான் பெண்கள் மற்றும் குழந்தைகளின் நல்வாழ்விற்கு ஏற்ற உலகம் அமையும்.

**(கட்டுரையாளர் : பேராசிரியர், தஞ்சை மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர். நன்றி. தினமணி 20.03.2007)**



படிப்பகம்

www.padippakam.com

## புதிய கீதம்

இளைகிறோம் இளைகிறோம் இளைகிறோம்
இந்த பூமி நமக்குச் சொந்தம் என்று பாடி
இளைகிறோம் சொந்தமண்ணில் அகதிகளாய்
வாழுமிந்தக் கொடுமையை இந்த மண்ணின்
பெண்கள் நாங்கள் எதிர்த்திடவே
இளைகிறோம்.

எல்லையிட்டு எல்லையிட்டு எங்கள்
இலக்குதொலைவதா காணும் பொருளாய்
காட்சிப் பொருளாய் காலம் காலம் குறுகவா?
நமது உடல் - நமது உயிர் நமக்குச்
சொந்தம் இல்லையா? கேள்வி கேட்கத்
துணிந்து விட்டால் மாற்றம் நமது
இல்லையா?

யுகம் யுகமாய் முடங்கிக் கிடந்தோம்
அடிமைத் தளையின் பிடியிலே
அழகியென்ற பட்டமென்ன
அடிமைச் சேற்றில் மூழ்கவா?
பாவனைகள் ஒழித்து நாமும்
போர்க்குணமே கொள்ளுவோம்
புதுமையல்ல மனுஷியென்று
குரலெடுத்துச் சொல்லுவோம்.

ஆணின் காலே சரணமென்று
சரிந்து நாமும் கிடப்பதா?
நம் சிந்தனையை சிறையிலிடும்
நெறுமைகளை ஏற்பதா?
மானுடத்தில் பாதி என்ன
மனிதமின்றி வீழ்வதா?
சிறுமை கண்டு சிறியெழும்
புயலெனவே மாறுவோம்.
போதுமிந்த மௌனம் என்று
பொங்கி நிற்கும் காலமே
போதும் இந்த வதைகள் என்று
வீரம் கொள்ளும் காலமே
பழமை இருளில் ஒளியெனவே
புதிய கீதம் முழங்குவோம்
இனி உயிர் பெறுவோம்
உணர்வடைவோம்
உரிமை வாழ்வு காணுவோம்.

–சுபத்ரா

## திருமணம்

கள்ளிப் பாலுக்குத்
தப்பிய குழந்தை
தப்ப இயலவில்லை
ஆணிடமிருந்து!
பொத்திப் பொத்தி
வளர்க்கிறார்கள் பெண்ணை!
மீண்டும் ஆணிடம்
ஒப்படைப் பதற்கு!

– சா.மா.அறிவுக்கண்ணு

## சூளுரை

பெ.தமயந்தி

மனிதம் சிதைக்கப்பட்ட பெண்கள்
தங்கள் மனிதம் காத்து
மாண்புடனும், மதிப்புடனும்
வாடி
சமூக, அரசியல் , பொருளாதார,
கலாச்சார வாழ்வில், பறிக்கப்பட்ட
உரிமைகளைப் பெற.....
ஆணாதிக்க, தந்தை வழி
சமூகத்தில்,
சாதி, வர்க்க - தந்தை வழி
சமுதாயத் தாக்குதல்களால்
மிதிபட்டு..... வாழ்விழந்து......
பாலியல் வன்முறைக்கு
உள்ளாக்கப்பட்டு....
அடிபட்டு, கொலையுண்டு
மிருகத்தனமான வெறிக்குப்
பலியாகும் பலியாடுகளாய்.......
மும்முனை ஒடுக்குமுறையாக
சாதி, வர்க்க, தந்தை வழி
சமுதாய ஆணாதிக்கத்தால்
மறுக்கப்பட்ட
உரிமைகளைப் பெற.....
நிலவுடைமைச் சமூகத்தை ஒழித்து,
ஏகாதிபத்தியத்தை எதிர்த்து,
பெண் விடுதலைக்குப் போராடி
உயிர்நீத்தத் தோழர்கள்
கிளாரா ஜெட்கின் ,
ரோசா லுக்சம்பர்க் உள்ளிட்ட
பெண் தோழர்களின்
கனவுகளை நனவாக்கிட
தோழர்களே! ஒன்றிணைவோம்!
உறுதியேற்போம்!

சர்வதேசப் பெண்கள்
தினத்திற்காக........
பெ. தமயந்தி
வழக்கறிஞர். சேலம்



படிப்பகம்

www.padippakam.com

## நூல் அறிமுகம் :
## நாங்கள் அவர்களல்ல....

- நர்மதா

ஆண்களுக்கு இணையாக, ஆண்களை விடவும் அக்கறையாகப் பெண்ணியம் சார்ந்த கவிதைகளைப் பெண்கள் நிறைய எழுதுகிறார்கள். 'நாங்கள் அவர்களல்ல...' கவிதை நூல் இந்த நம்பிக்கையை மேலும் வலுவுள்ளதாக்குகிறது. இதன் நூலாசிரியர் நர்மதா தெளிந்த முடிவுகளோடு எழுதுகோல் ஆயுதம் ஏந்தியுள்ளார். எனவே அவர் திசைவழிகளில் தடுமாற்றமோ தன்னம்பிக்கைக் குறைவோ இல்லை. நூல் முழுவதும் சீற்றமும் செயல் வேகமுமே ஓங்கி ஒலிக்கிறது.

பெண்ணியம்மீதான பழமையானவர்களின் கற்பிதங்கள் நெஞ்சை நெருப்பில் போட்டு வறுத்தெடுக்கின்றன. வைப்பாட்டி வாழாவெட்டி விபச்சாரி என்று எத்தர்களின் பட்டங்களில் பொதி சுமக்கும் வாழ்க்கை என்று நர்மதா அவர்கள் எழுதும்போது நம் நெஞ்சமும் உலைக்களம்போல் கொதிக்கிறது.

'கண்ணீரும்கம்பலையும் பெண்ணினத்தின் கவசகுண்டலங்களாய்ப் போயின' என்று வெளிப்படும் அவருடைய வெப்பப் பெருமூச்சு காலங்காலமாய்ச் சுமத்தப்பட்டு வரும் அழுக்குகளைக்கவித்துவத்தோடு காட்டுகின்றன.

பெண்களின் நிலையில் மாற்றம் வேண்டுமெனில் பெண்கள் தான் முன்னணியில் நின்று போராட வேண்டும். அப்போதுமட்டுமே விடிவு என்று பெண்களை அறைகூவி அழைக்கிறார் கவிஞர்.

இல்லத்தரசியே! இனிய தோழியே!
சாவி உன்கையில் இருக்க
உன் மகளைச்
சம்மட்டி தேட ஷக்காதே
கற்காலக் கண்ணோட்டத்தில்
அவளை வளர்ப்பது
இலைதழையை உடுத்தச் சொல்லி
இழிவுபடுத்துவதாகாதா?

என்றே நர்மதாவின் ஆழ்ந்த சிந்தனைகளை எல்லா இல்லத்தரசிகளும் உளங்கொள்ள வேண்டும்.

ஏனெனில்
'கல்யாண வியாபாரத்தில்
இறைச்சிக் கடைபோல
இளசுகளுக்கே முன்னுரிமை'

என்ற இழிநிலை உள்ளதைக் காட்டிக் கவிஞர் எச்சரிக்கிறார். 'ஆட்டுக்குட்டிகள் போல் ஆணின் பின்னால் நடக்கும் பெண்களின் பிறவி ஊனம் மாற்றப்பட, மேம்போக்கான சீர்திருத்தங்களால் பயனில்லை. புரையோடிப் போன புண்ணுக்கு அறுவை மருத்துவமே அவசியம் என்பது இவர் முடிவு. எனவேதான் புதிய கண்ணகியாகப் பொங்குகிறார்.

"கணவனை எரிக்க வேண்டிய கண்ணகியை மதுரையை எரிக்க வைத்து மனம் போனபடி கதைத்தார்கள் மடமையை அன்றே விதைத்தார்கள்" என்று கொதித்துப்போய்ப் பாடுகிறார். மாற்றம் தலைகீழாய் இருக்க வேண்டும் என்று சீற்றம் கொள்கிறார்.

"முகமூடிகளுக்கு வர்ணம்பூசும் நேரத்தில்
முகத்தையே கழுவிச் சுத்தம் செய்யுங்கள்"

என்பது இவர் கட்டளை.

மானம் உனக்குள்
இருக்க வேண்டிய ஒன்று
ஆணின் சட்டைப் பையிலிருந்து
அவ்வப்போது கேட்டுவாங்க
அது என்ன சில்லரையா?
பெண் சிரித்தால் போச்சாம்
மூடர்களின் வரையறையை
இடிச்சிரிப்பால் பொடியாக்கிட
ஏன் இன்னும் தயக்கம்
மான் என்றும் மலர் என்றும்
இழித்துக் கூறும் மடமையைச்சாடி
மனிதர்கள் நாங்கள் என்று
சிலிர்த்தெழும் நாள் எந்த நாள்?

என்று அடுக்கடுக்காய் இவர் கேட்கும் கேள்விகள் பழமைக் கோட்டைகளை அதிரவைக்கின்றன.

காலங்காலமாய்க் கற்பெனும் பூட்டைப் பெண்ணுக்கு மட்டுமே பூட்டி அடிமை செய்த பிற்போக்காளர்கள் "ஒருவருக்கு ஒருத்தி என்பதே உயர்தமிழ்ப் பண்பாடு" என்று ஏமாற்றித் திரியும் எத்து வேலைகளைக் காரித்துப்பிக் கலகம் செய்கின்றன நர்மதாவின் கவிதைவரிகள். "இரண்டு பேரைப் பார்த்து விட்டால் வேசி என்ற முத்திரை ஆயிரம் பேர் பார்த்த போதும் ஆண்கள் மட்டும் சர்க்கரை" என்ற வரிகள் சாட்டையாய் விழுந்து ஆணினத்தின் பொய்மைகளைத் தோலுரிக்கின்றன. கணவன் காட்டிய வழியே போய்க் கலங்கிச் செத்த கண்ணகியின் சிலப்பதிகாரத்தை மாற்றிப் புதிய சிலப்பதிகாரம் எழுதுகிறார் நர்மதா.

குத்துவிளக்கென்று சொல்லி வைத்துக் குத்துக் கல்லாகச் செய்துவைத்த கொடும் கொள்கைக்குக் கொள்ளியிடு - புது வாழ்க்கைதனை அள்ளி எடு என்று புதிய பாதை காட்டும் இவரின் கவிதைகள்பெண்ணியச் சிந்தனையாளர்க் கோர் கலங்கரை விளக்காக ஒளிர்கின்றன. குறைந்த விலையில் வெளிவந்துள்ள இந்தச் சிறந்த நூலை எல்லோரும் வாங்கிப் பயன்பெற வேண்டியது கட்டாயம்.

விலை உருவா.25/-

நூல்பெற : நர்மதா 8. அறிவரசன் சாலை, அரங்கநாதன் நகர், போரூர், சென்னை-116 தொ.பேசி-24825975.

- தமிழேந்தி.



படிப்பகம்

www.padippakam.com

தனிச்சுற்றுக்கு மட்டும். தனியிதழ் உருவா 5/ ஆண்டு நன்கொடை உருவா 40/ த.சி.ச.
(TASNA Regd.No.) உறுப்பிதழ் 191/1/98

## இலக்கணம் மீறு

'தமிழேந்தி'

மாற்றுக் குறையாத்
தங்கம் நீ!
மண்ணில் விளையும்
தங்கத்தின் மேல்
மகளே உனக்கேன்
அத்தனை மயக்கம்?
நகையும் பட்டும்
உன் முன்னேற்றப் பகை

உன்
முத்துப்பல்லழகுச்
சிரிப்பை விடவா
முத்துக் கம்மல் உயர்ந்தது?
மூக்கணாங் கயிறுகுத்தும்
முன்முடிவோடுதான்
முளைக்கும் போதே உனக்கு
மூடர்கள்
மூக்கும் காதும் குத்த
முந்துகிறார்களோ?
பூவுக்கு எதற்கு
முகப்பூச்சு?
வான வில்லுக்கா
வண்ணம்அடிப்பார்கள்?
மணப்பெண்ணுக்கு ஏன்
மணிக்கணக்கில் ஒப்பனை?
மரபான பூட்டுகள்
அடித்து நொறுக்கு

நீண்ட கூந்தல்
நெற்றிக் குங்குமம்
காலில் மெட்டி
கழுத்து மாங்கல்யம்
காஞ்சிப் பட்டு
காமாட்சி விளக்கு
வெள்ளிக்கிழமை
கட்டாயம் விரதம்
எல்லா இலக்கணக்
குப்பைகளையும்
ஒன்றாய்க் கூட்டிக்
கொள்ளிவை

பெரியாரைப் படி
மார்க்சைப் படி
எரிமலையின் முன்
இலவம் பஞ்சாய்
உருத்தெரியாமல்
பொசுங்கும் உன்துயர்கள்

உனது விடுதலைக்குள் தான்
ஆணின் விடுதலையும்
அடக்கம் என்பதை
எடுத்துப் பேச
பெண்ணே!
விடுத்த கணையாய்
வெகுண்டு பாய்ந்திடு!

பி.இரெ.அரசெழிலன்
நாளை விடியும்
தமிழ்க்கூடர் இல்லம், 7ஆ, ஐசன்கோவர் நகர்
மலைக்கோயில் தெற்கு, திருவெறும்பூர்.
திருச்சிராப்பள்ளி-620 013.
மின்னஞ்சல்:
arasezhilan_1964@yahoo.co.in

Book Packet Containing Printed Book / அச்சிட்ட நூல் இ
சேரல்

கண்தானம் செய்வீர்
இரத்ததானம் செய்வீர்

புகைப்பதை விடுவீர்
புற்றுநோயைத் தடுப்பீர்

கதிர்அச்சு : சென்னை மாணவர் நகலகம், திருவெறும்பூர். பேச : 2512798

படிப்பகம்